Registerd as a News Paper    பக்கங்கள் 06    விலை ரூபா 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM    மக்கள் தினசரி    Peoples Daily

நாதம் 05    திருவள்ளுவர் ஆண்டு 2025    மாசி 17    (01.03.94)    செவ்வாய்க்கிழமை    ஓசை 11

## உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு இவ்வருடம் இல்லை

சிறிலங்காவிற்கு உதவிவழங்கும் நாடுகளின் கூட்டம் அநேகமாக இவ்வருடம் நடைபெறமாட்டாது என செய்திகள் தெரிவிக்கின்றன. முன்னதாக எதிர்வரும் ஜூன் மாதம் எட்டாம் திகதி உதவி வழங்கும் நாடுகளின் குழுக் கூட்டம் பாரிசில் கூடவிருந்தது. இது பின்னர் காலவரையறையின்றி பின்போடப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. உலகவங்கியுடன் சிறிலங்கா அரசிற்கு ஏற்பட்டகருத்து வேறுபாடே உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் பின்போடப்படுவதற்குக் காரணம் எனவும் தெரிவிக்கப்பட்டது. எனினும்இப்போது சிறிலங்காவிற்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் இவ்வாண்டு நடைபெறவே மாட்டாது எனத் தெரியவருகி (6ஆம் பக்கம் பார்க்க)

## இன்று ...டகுசேவை

...ளாலி - பூநகரி படகு ...வை இன்று வழமையான ...ரத்திற்கு நடைபெறும் ... அரசியற்துறையினர் ...வித்துள்ளனர்.

# பிரச்சினைக்குத் தீர்வுகாண நோர்வே அரசாங்கம் முயற்சி!

## 'நரோமா' பயணிகள் கவனத்திற்கு

''நரோமா'' கப்பல் மூலம் பருத்தித்துறையிலிருந்து திருகோணமலைக்குச் செல்வதற்காக பதிவு செய்த பிரயாணிகள் இன்று முற்பகல் 9-00 மணிக்கு பருத்தித்துறை இறங்குதுறையில் சமுகமளிக்குமாறு வேண்டப்படுகின்றனர். இன்றைய தினம் பருத்தித்துறையிலிருந்து ''கோமாரி'' கப்பல், ''நரோமா'' கப்பலில் செல்வதற்கான பிர (6ஆம் பக்கம் பார்க்க)

...ளாலியில் பயணிகள் பலியான விவகாரம்

## சர்வதேச செஞ்சிலுவை கொழும்புக்கிளை முற்றுகை

(யாழ்ப்பாணம்)

சர்வதேச செஞ்சிலுவைச் ...ங்க கொழும்பு கிளையினை ...ல தமிழர்கள் நேற்று முற்றுகையிட்டவண்ணம் இருந்ததாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. ...சென்ற 26-ம் திகதி இரவு ...ளாலி கடல் நீரேரிப் பகுதி... இடம்பெற்ற விமானக் ...வடு வீச்சு, எறிகணைத் ...குதலை அடுத்து முப்பதிற்கு மேற்பட்ட பயணிகள் காணாமல் போனதாக லண்டன் பி. பி. ஸி தெரிவித்ததை தொடர்ந்தே நேற்று காலை முதல் தமிழர்கள் மேற்படி சர்வதேச செஞ்சிலுவைச் சங்க கிளைக்குச் சென்று தமது உறவினர் நிலை தொடர்பாக தகவல்களை பெறுவதில் ஈடுபட்டிருந்தனர் என தெரியவருகிறது. (நி)

## தற்காலிக கப்பல் சேவை செஞ்சிலுவை நடத்துகிறது

(யாழ்ப்பாணம்)

...னிதாபிமான அடிப்படை... யாழ். குடாநாட்டிற் ...ான பயணிகளை ஏற்றிச் ...சல்லும் தற்காலிக கப்பல் சேவையொன்றை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மேற்கொள்ளவிருப்பதாக யாழ். ...வதேசசெஞ்சிலுவைச்சங்க ...ழ். வதிவிடப் பிரதிநிதி தெரிவித்தார்.

மேற்படி சேவையில் ஈடுபடும் கப்பல் இம்மாதம் நான்காம் திகதி திருகோணமலை துறைமுகத்தில் இருந்து புறப்பட இருப்பதாகவும் இது ஐந்தாம் திகதி பருத்தித்துறை இறங்குதுறையை வந்தடையும் என்றும் பின்னர் ஆறாம் (6ஆம் பக்கம் பார்க்க)

## சமரசத் திட்டம் தயாரிக்கவென இராஜதந்திரி ஒருவர் நியமனம்

இனப்பிரச்சினை தொடர்பாக சிறிலங்கா அரசாங்கத்திற்கும், விடுதலைப்புலிகள் இயக்கத்தினருக்கும் இடையில் சமரசப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான முயற்சியில் நோர்வே அரசாங்கம் இறங்கியுள்ளதாகவும், இதற்கென இராஜதந்திரி ஒருவரையும் நியமனம் செய்து உள்ளதாகவும் ஜலண்ட் பத்திரிகை தெரிவிக்கின்றது,

இது குறித்து ஐலண்ட் பத்திரிகை தகவல் தருகையில், இரு தரப்புகளிடையிலும் சமரசப் பேச்சுகளை ஆரம்பிக்க வகைசெய்யும் விதத்தில் சமரசத்திட்டம் ஒன்றை தயாரிக்க நோர்வே அரசு முன்னாள் அரசியல் தலைவரும் உலகளாவிய சர்வதேச நிறுவகத்தின் செயலாளர் நாயகமுமான ஆர்ன் பிஜோர்ட்ரோப்ட் என்பவருக்கு அனுமதி வழங்கியுள்ளது.

இது குறித்து இவர் நோர்வே வானொலியான என். ஆர். கேயிற்கு அளித்த நேரடிப் பேட்டியில் தமக்கு (6ஆம் பக்கம் பார்க்க)

## ஹெலித் தாக்குதலுக்கு இரு மீனவர் பலி

### கேரதீவு பகுதியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

கேரதீவுக்கும் நாகதேவன் துறைக்கும் இடையே மீன் பிடித்துக் கொண்டிருந்தவர்கள் மீது சிறிலங்கா அரசுக்குச் சொந்தமான உலங்கு வானூர்தி நடாத்திய தாக்குதலில இருவர் பலியாகினர் ஒருவர் காயமடைந்தார்.

நேற்று மாலை 4-30 மணியளவில் நடைபெற்ற இச் சம்பவத்தில் ஆறுமுகம் செல்லையா (55), நடராசா (50) ஆகிய இருவரும் பலியாகினர். சிவ நேசச் செல்வன் (34) என்பவர் காயமடைந்தார்.

நவாலி தெற்கைச் சேர்ந்த மூவரும் தனங்கிளப்பு பகுதியில் வாடி அமைத்து தொழிலில் ஈடுபட்டிருந்தனர்.

காயமடைந்தவர்களும் இறந்தவர்களின் சடலங்களும் பின்னர் ஏனையமீனவரால் மீட்கப்பட்டு சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். (ஓ), (நி)

## மணலாறில் புலிகள் அதிரடி; நான்கு ஆயுதப்படையினர் பலி

(மணலாறு)

மணலாறுப் பகுதியில் விடுதலைப் புலிகள் மீண்டும் நடத்திய அதிரடி தாக்குதலில் மூன்று சிறிலங்காஇராணுவத்தினரும் ஊர்காவற்படையைச் சேர்ந்த ஒருவரும் கொல்லப்பட்... களும் கைப்பற்றப்பட்டன.

நேற்றுக் காலை 8 55 மணியளவில் மணலாறு பராக்கிரமபுர இராணுவ முகாமிற்கு அண்மையில் அமைந்திருந்த படையினரின் காவலரண் ஒன்றின் மீது விடுதலை நடத்தினர். மூன்று நிமிடங்கள் வரையே நீடித்த இந்த அதிரடித் தாக்குதலில் 3 இராணுவத்தினரும் ஊர்காவற்படையொருவரும் பலியாகினர். அவர்களது ஆயுதங்களும் புலிகளால் கைப்...

யாழ் பல்கலைக்கழக

## கல்வித்துறைத் தலைவர் ராஜினாமா சமர்ப்பிப்பு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வித் துறையின் தலைவரான பேராசிரியர் வ. ஆறுமுகம் தனது துறைத்தலைவர் பதவியை இராஜினாமாச் செய்யும் கடிதத்தை நேற்றுக்காலை துணை வேந்தரிடம் சமர்ப்பித்தார்.

இராஜினாமாக் கடிதத்தைத் துணைவேந்தர் கலைப் பீடாதிபதியின் பரிசீலனைக்கு அனுப்பியுள்ளார் எனத் தெரியவருகிறது. கல்வித்துறை (6ஆம் பக்கம் பார்க்க)

(6ஆம் பக்கம் பார்க்க)

சிறிலங்காஇராணுவத்தினரும் ஊர்காவற்படையைச் சேர்ந்த ஒருவரும் கொல்லப்பட்டனர். படையினரின் ஆயுதங் மிற்கு அண்மையில் அமைந்திருந்த படையினரின் காவலரண் ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் திடீர் தாக் காவற்படையொருவரும் பலியாகினர். அவர்களது ஆயுதங்களும் புலிகளால் கைப்

(6ஆம் பக்கம் பார்க்க)

மாச் செய்யும் கடிதத்தை நேற்றுக்காலை துணைவேந் யவருகிறது. கல்வித் துறை

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஈழநாதத்தில் மாணவர் பகுதி

மாணவர்களுக்குப் பயன் தரத்தக்க வகையில் அமை[ந்த] கட்டுரைகள், ஆக்கங்கள் அடங்கிய பகுதியொன்று [ஈழ]நாதம் தினசரியில் ஆரம்பமாக உள்ளது. வாரம் [தோ]றும் இப் பகுதி வெளிவரும் என்பதை மகிழ்ச்சி[யுட]ன் அறியத்தருகிறோம். இதன் முதல் பகுதி நாளை [வெ]ளிவரும்.

## கைப்பற்றிய ஆயுதங்கள்

(மணலாறு)

மணலாறு பராக்கிரமபுர இராணுவ முகாம் அருகே அமைந்திருந்த காவலரண் மீது நேற்று விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் படையினரிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்களினதும் உபகரணங்களினதும் விபரம்;

- ரி-81 ரகத் துப்பாக்கிகள் - 03
- ரி-81 ரவைக்கூடுகள் - 08
- நடுத்தர ரவைகள் - 406
- சப்பாத்துகள் - 02 சோடி
- தலைக்கவசம் - 02
- ரி. வீ. கிளைமர் - 01
- வயர் சுருள் - 01
- கிறபாக் - 02
- வானொலிப்பெட்டி - 01
- இராணுவப் பட்டிகள் -02

## ஹெந்தல, மாகோகப்பல்கள் பருத்தித்துறை வந்தன

பருத்தித்துறை இறங்கு துறைக்கு ஹெந்தல, மாகோ கப்பல்கள் நேற்றுவந்து சேர்ந்தன. காலை 6.00 மணிக்கு 1899 மெட்றிக் தொன் மாவுடன் ஹெந்தலவும், 7000 பரல் மண்ணெய்யுடன் 10.00 மணிக்கு மாகோ கப்பலும் வந்து சேர்ந்தன.

ஹெந்தல கப்பலில் இருந்து மா இறக்கும் வேலைகள் உடனேயே ஆரம்பமானது. மண்ணெய் இன்று இறக்கப் படவுள்ளது. (யோ)

## மட்டக்களப்பு மாவட்டத்தில் [விமா]ன தாக்குதலுடன் வந்தராணுவம்

### பொதுமக்கள்மீது தாக்குதல்

(மட்டக்களப்பு)

[மட்]டக்களப்பில் விமானத் [தாக்கு]தலின் உதவியுடன் [முன்]னறிவந்த படையினர் [பல] கிராமங்களில் பெரும் [அட்]டூழியங்கள் புரிந்துள்ள[ன].

[க]டந்த வெள்ளியன்று [மா]லை 5 மணியளவில் ஈச்சி[ல]ம்பற்றை, 49ஆம் கட்டை, [வெரு]கல், கதிரவெளி ஆகிய [இரா]ணுவ முகாம்களிலிருந்து [பட]யினர் பெரியசோலை, [வெ]ருகல், முகத்துவாரம், [மா]துச்சேனை, வாழைத்[தோ]ட்டம், இலங்கைத்துறை [மு]கத்துவாரம் பகுதிகளை [சு]ற்றிவளைத்தனர்; படை[யின]ர் தேடுதலின் போது [பொ]துமக்களை மிகமோசமாக தாக்கினர்.

இதேசமயம் அன்றைய தினம் மாலை 5 மணியளவில் வெருகல் முகத்துவாரப்பகுதியில் இரு குண்டு வீச்சு விமானங்கள் குண்டு வீச்சை நடத்த உலங்குவானூர்தி ஒன்று கலிபர் தாக்குதல் நடத்த இப் பகுதி நோக்கி இராணுவத்தினர் முன்னேறிவந்தனர். பின்னர் படையினர் மறுநாள் மாலை நான்கு மணியளவில் சுற்றிவளைக்கப்பட்ட கிராமங்களிலிருந்து இராணுவத்தினர் பின்வாங்கிச் சென்றனர். திரும்பிச் சென்ற படையினர் தற்போது மாவடிச்சேனை, விநாயகபுரம், கறுக்காமுனை ஆகிய பகுதிகளில் தரித்து நிற்கின்றனர்.

படையினர் இந் நடவடிக்கைகளின் போது மீனவர்களின் இருவள்ளங்களும் படையினரால் எடுத்துச் செல்லப்பட்டன. உள்ளூராட்சித்தேர்தலை முன்னிட்டே இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

## சிறுவன் மரணம்

தண்ணீர் துரவு ஒன்றில் தவறிவிழுந்த ஒன்றரை வயதுச் சிறுவன் மரணமானார்.

வரணி வடக்கு மாசேரி என்ற இடத்தைச் சேர்ந்த க. கணேஸ் என்பவரின் மகனே இவ்வாறு மரணமானவராவார்.

இச் சம்பவம் நேற்று முன் தினம் நடைபெற்றது. (யோ)

## எறிகணை வீச்சு

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா இராணுவத்தினர் நேற்று மாலை யாழ். நகர பகுதியை நோக்கி எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

மேற்படி எறிகணைகள் கொட்டடி, பிறவுண்வீதி பகுதியில் விழுந்து வெடித்துள்ளதாக தெரியவருகின்றது.

## தொண்டாவுடன் பேசுவோர் விபரம்

## சிறிலங்கா அரசிற்கு வழங்க கனேடிய அரசாங்கம் நிபந்தனை

(கொழும்பு)

இலங்கையின் இனப் பிரச்சினை குறித்து தொண்டமானுடன் பேச்சுவார்த்தை நடத்த விரும்பும் கனடா நாட்டின் பாராளுமன்ற உறுப்பினர்களினதும், தமிழ்ப் பிரமுகர்களினதும் விபரங்களைத் தரும்படி சிறிலங்கா அரசாங்கம் விடுத்த கோரிக்கைக்கு பதிலளிக்க கனேடிய அரசாங்கம் நிபந்தனை விதித்துள்ளது.

கனடாவிலுள்ள இலங்கைத் தூதரக அதிகாரி பேச்சு நடாத்த விரும்புபவர்களின் விபரங்களைத் தரும்படி கனேடிய அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

இக் கோரிக்கைக்கு கனடா நாட்டின் சார்பில் கனடாவின் இலங்கை அகதிகளுக்கான இணைப்பதிகாரியான திரு. மாக்ஸ்பேக்கர் பதிலளித்தார்.

இவர் தனது பதிலில் இனப்பிரச்சினை தொடர்பாக தாம் சிறிலங்கா ஜனாதிபதிக்கு ஏற்கனவே எழுதிய கடிதங்களுக்குத் தகுந்த பதில் கிடைக்கும் பட்சத்திலேயே சிறிலங்கா அரசு கோரியிருக்கும் மேற்படி விடயங்கள் குறித்து விபரம் தர முடியும் என்று கூறியுள்ளார்.

## படை முகாமில் வாக்காளர் அட்டை

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் வாக்காளர் அட்டைகள் இராணுவ முகாம்களில் இருப்பதாகவும் தேர்தலில்வாக்களிக்க செல்லும் சகலரும் இராணுவ முகாமிற்கு வந்து வாக்காளர் அட்டையை பெற்று செல்லுமாறும் இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்

கிழக்கு மாகாண மூதூர் பகுதியில் தேர்தல் தினத்தன்று அதாவது இன்று சகலரும் வாக்களிக்க வேண்டுமென்றும் அதனால் இராணுவ முகாமிற்கு வந்து சகலரும் தமது வாக்காளர் அட்டையை எடுத்து சென்று வாக்களிக்கவேண்டும் என நிர்ப்பந்தித்திருப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

## சிறிலங்காவிற்கு வழங்கும் உதவிகள் குறித்து கனேடிய பாராளுமன்ற உறுப்பினர் விசனம்

(கொழும்பு)

சிறிலங்கா அரசாங்கம் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் மிகவிரைவில் பாரிய இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான தயாரிப்பு வேலைகளை மேற்கொண்டுவருவதாக எமக்கு அண்மையில்கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன; இந்த நிலையில் எமது அரசினூடாக வழங்கப்படும் உதவிகள் சிறிலங்காவில் எவ்வாறு பயன்படுத்தப்பட்டு வருகின்றது என்பது குறித்து எமது நாட்டுப் பாராளுமன்றஉறுப்பினர்கள் விசனத்துடன் நோக்குகின்றனர்'' இவ்வாறு கனடா நாட்டு அரசாங்கத்தின் சார்பில் இலங்கையின் கனேடியத் தூதுவருக்கு கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது;

கனடா நாட்டில் தங்கியிருக்கும் இலங்கை அகதிகள் விவகாரங்களுக்குப் பொறுப்பான கனடா அரசின் இணைப்பதிகாரியும் இலங்கையின் இனப்பிரச்சினையில் அதிக ஆர்வம் காட்டுபவருமான திரு. மாக்ஸ் பேகர் கனடா நாட்டு அரசின் சார்பில் இக் கடிதத்தை தமது தூதுவராலயத்திற்கு எழுதியுள்ளார்.

இலங்கையின் இனப் பிரச்சினை தொடர்பாகவும், கனடாவில் தஞ்சம் புகுந்துள்ள இலங்கை அகதிகள்'விவகாரம் குறித்தும் கனடா அரசின் சார்பில சிறிலங்கா ஜனாதிபதிக்கு ஏற்கனவே கடந்த நவம்பர் மாதம் 6ஆம் திகதியும், டிசம்பர் மாதம் 3ஆம் திகதியும் கடிதம் எழுதப்பட்டது. ஆனால் இக்கடிதத்தில் குறிப்பிடப்பட்ட முக்கிய விடயங்களுக்கு சிறிலங்கா அரசின் சார்பில் இதுவரை எந்தப்பதிலும் வழங்கப்படவில்லையென்றும் தாம் இன்னமும்

(6ஆம் பக்கம் பார்க்க)

## புக்காரா [தாக்கு]நோட்டம்

([வ]டமராட்சி)-

[...]ய், பத்தைமேனிப் [பகுதிக]ளை குண்டுவீச்சு [விமா]னங்கள் நேற்று முன் [தினம்] வட்டமிட்டு [...]ட்டன.

[...]லியிலிருந்துவந்த [புக்கா]ரா' உலங்குவானூர்தி [...] விமானங்களே இப் [பகுதி]யை வட்டமிட்டு [...]மிட்டன. (யோ)

## வரி விளம்பரம்


**விரைவில்**

**பாலர் ஆசிரியராக...!**

தகைமை ஜி. ஸி. ஈ (O/L) சனி, ஞாயிறு பயிற்சி வகுப்பு நேரில் வரமுடியாதோர், தபால் வழியிலும் பயிலலாம். விரைவில் ஆரம்பம். பாலர் ஆசிரியர் சங்கம் உயர்கலைக் கல்லூரி ஆனைப்பந்தி-யாழ்ப்பாணம். (7631)

**வியாபாரிக்கு**

அழகுசாதனப் பொருள்கள், வேஸ், நூல், கோல்ட் கவறிங் நகைகள் எவர்சில்வர் பாடசாலை உபகரணங்கள் ஆகியவற்றை மொத்தமாகப் பெற்றுக்கொள்ள ஜெயா அழகுசாதனமாளிகை, 177 A மின்சாரவீதி, யாழ்ப்பாணம். (சி-8709)


## காலம் நீடிப்பு

(மானிப்பாய்)

கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களுக்கு வழங்கப்பட்டுக் கொண்டிருக்கும் மண்ணெண்ணெயினை அநேகமானோர் பெற்றுக் கொள்ளாமையினால் மண்ணெண்ணெய் வழங்கப்படும் தினம் மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

புதிதாக தம்மை பதிந்து கொண்டவர்களும், மேலும் இதுவரையில் தம்மை மாணவரவையின் அங்கத்தவர்களாக பதியாதவர்களும் விரைவில் தம்மை பதிவுசெய்து எதிர்வரும் 6-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியிலிருந்து நான்கு மணிவரை உள்ள நேரத்தில் மாணவர் அவைக் கட்டடத்தில் மண்ணெண்ணெயை பெற்றுக் கொள்ளுமாறு மாணவர் அவைச்செயலாளர் பாஸ்கரன் தெரிவித்துள்ளார். (07)

# இராணுவ உயர்அதிகாரிகள் அரசியலில் ஈடுபடுகின்றனர்

### மூத்த தளபதிகள் விசனம்

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவ உயர் அதிகாரிகள் அரசியலில் அதிக ஈடுபாடு காட்டுவதாக மூத்த உயர் அதிகாரிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

அரசியல்வாதிகளின் சேவையில் இவர்கள் தம்மைக் கூடுதலாக ஈடுபடுத்தியுள்ளனர். இராணுவ சேவைக்குத் தம்மை அர்ப்பணிப்பதை விடுத்து அரசியலில் கூடுதல் கவனம் செலுத்துகின்றனர் எனவும் மேலும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும் எனவும் அவர்கள் எச்சரித்துள்ளனர். ஆயுதக் கொள்வனவில் இராணுவ அதிகாரிகள் மோசடியில் ஈடுபடுகின்றனர். போரில் இறந்த சிப்பாய்களின் மரணச் சடங்குகளுக்குக் கொடுக்கப்படும் நிதியிலும் மோசடிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவையும் நிறுத்தப்பட வேண்டும் எனவும் அவர்கள் கூறியுள்ளனர்.


பிரிவுபசார விழாவும், விருந்தும்

**பேராசிரியர் அ. துரைராஜா துணைவேந்தர்**

பேராசிரியர் அ. துரைராஜா அவர்கள் 1988-ம் ஆண்டு முதல் 1994 பங்குனி வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் துணைவேந்தராக பணியாற்றியபின் சிறந்த பல்கலைக்கழகத்திற்கு மாற்றலாகிச் செல்வதை முன்னிட்டு அவருக்கு 1994-03-26ஆம் திகதி மாலை 6.00 மணிக்குப் பிரிவுபசார விழாவும், இராப்போசன விருந்தும் நடத்துவதெனவும், பல்கலைக்கழகத்தின் சிறந்த மாணவருக்கான பரிசில் (கள்) வழங்குவதற்கான நிதியம் ஒன்றினை ஆரம்பிப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதில் பங்குபற்ற விரும்பும் நலன்விரும்பிகள் யாழ். பல்கலைக்கழகப் பதிவாளருடன் 1994-03-18 பி.ப 4.00 மணிக்கு முன் தொடர்புகொண்டு ரூபா 250/-க்குக் குறையாது தங்கள் பங்களிப்பினைச்


## புங்குடுதீவு வித்தியாலய புதிய கட்டட திறப்பு விழா

யாழ் புங்குடுதீவு மகா வித்தியாலயத்தின் புதிய கட்டடத் திறப்பு விழா நாளை புதன் கிழமை முற்பகல் பதினொரு மணியளவில் யாழ்ப்பாணம் பிறவுண் வீதியில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் தம்பதிகளும், கௌரவ விருந்தினராக வேலணை பிரதிக் கல்விப் பணிப்பாளர் நா.சுந்தரலிங்கமும் கலந்து கொள்ளவுள்ளனர்.

## நிவாரணம் வழங்குவதற்கு உலர்உணவு வந்தது

(குருநகர்)

யாழ். மாவட்டத்தில் நடைபெற்றுவரும் ராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்துள்ள குடும்பங்கள் மற்றும் விதவைகள், வயோதிபர், அனாதைப் பிள்ளைகளுக்கு நிவாரணம் வழங்குவதற்காக யாழ். மறை வட்ட மனித முன்னேற்ற நடுநிலையம் 4கோடி 1லட்சத்து 50 ஆயிரத்து 32 ரூபா 96சதத்திற்கு உலர் உணவுப் பொருள்களை யாழ் எடுத்து வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அவற்றுள் பாடசாலைப் பிள்ளைகளுக்கான சீருடைகள் மற்றும் உபகரணங்கள், நிலைய ஊழியர்களுக்கான துவிச்சக்கர வண்டிகளும் அடங்கும்.

கொழும்பில் இருந்து கப்பலில் பருத்தித்துறைக்கு கொண்டுவரப்பட்ட பொருள்கள் பெப்ரவரி 11-ம் திகதியிலிருந்து 21-ம் திகதிவரை பகுதி பகுதியாக இறக்கப்பட்டு யாழ்ப்பாணம் லொறிகளில் கொண்டுவரப்பட்டதாகவும் நிலைய இயக்குனர் வண- எச். எஸ். ஜெபநேசன் அடிகள் தெரிவித்தார்.

கப்பலில் எடுத்துவரப்படுகையில் பொருள்களில் அனேகமானவை சேதமடைந்தும் காணாமல் போயுமுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (21)

## ஆக்கிரமிப்பு படையினரால் ஆற்றலை அழிக்கமுடியாது

### அகஸ்தியர் ஆய்வரங்கில் உரை

(குருநகர்)

''தமிழ் மண்ணை அபகரிக்கும் நோக்குடன் கிரிமலைக்குள் நுழைந்த சிறிலங்கா ராணுவம் வலித்தூண்டலில் இருந்த நம் நாட்டு எழுத்தாளர் அகஸ்தியரின் இல்லத்துள் புகுந்து அவரது படைப்புகள் அனைத்தையும் மற்றும் சேகரித்து வைக்கப்பட்டிருந்த தமிழ் நூல்கள் அனைத்தையும் தீக்கிரை செய்தது.''

நவாலி தெற்கு அந்திரான் முருகானந்தா சனசமூக நிலையத்தில் கடந்த வெள்ளி நடைபெற்ற ''அகஸ்தியர் படைப்புகள்'' ஆய்வரங்கில் கலந்து கொண்டு பேசிய திருமதி மனோன்மணி சண்முகதாஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிரபல எழுத்தாளர் அப்பச்சி மகாலிங்கம் தலைமையில் ஆய்வரங்கு நடைபெற்றது.

திருமதி மனோன்மணி சண்முகதாஸ் தொடர்ந்து பேசுகையில்:

பதினொராம் நூற்றாண்டில் யப்பானிய எழுத்தாளரால் எழுதப்பட்ட உலகின் முதல் நாவல் இன்றும் பேசப்பட வேண்டிய அவசியத்தை மீளவும் பெற்றுள்ளது.

மேலைத்தேசக்காழ்ப்புணர்வுகளால் சாம்பல் மேடாக்கப்பட்ட யப்பானிய மண்ணின் மீள் வளர்ச்சியை தடுத்து நிறுத்திவிட முடியவில்லை. இந்த வகையிலே தான் எமது மண்ணை ஆக்கிரமித்த ஆயுதப் படையினராலும் காலமாற்றத்தாலும் கூட எழுத்தாளர் அகஸ்தியரின் ஆற்றலை அவரது படைப்புகளை அழித்தொழித்துவிட முடியவில்லை இவ்வாறு அவர் தெரிவித்தார்.

ஆய்வரங்கில் பேராசிரியர் அ. சண்முகதாஸும் கலந்து கொண்டு பேசினார். (21)

## ஆமணக்கு எண்ணை; அதிகரிக்க ஆராய்வு

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் தமிழீழத்தின் வளர்ச்சியையும் அபிவிருத்தியையும் குறிக்கோளாகக் கொண்டு பல்வேறு செயற்திட்டங்களை ஆற்றிவருகின்றது. அதன் தொழில் துறையின்

இருக்கும் விதை முழுவதையும் நாட்டுவதற்கும் ஆமணக்கை வடித்து எண்ணெய் பெறும் வீதத்தை கூட்டுவதற்கும் செய்யவேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஆராயப்பட்டன.


**அறிவித்தல்**

**வட பிராந்திய மு. ச. மோ. வ. சேவைச்சங்கத்தின் நடப்பு வருடத்திற்கான (1994) புதிய நிர்வாகிகள் விபரம்**

| | |
|---|---|
| திரு. மா. சிவசுப்பிரமணியம் | தலைவர் |
| திரு. இ. கணேசலிங்கம் | உப-தலைவர் |
| திரு. செ. யோகநாதன் | செயலாளர் |
| திரு. சி. சிவராசா (ஸ்ரீ) | பொருளாளர் |

**ஜேர்மன் சமஷ்டி குடியரசின் நிதி உதவியுடன்**

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் (ரி. ஆர். ஆர். ஓ.)

சுன்னாகம் லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் இணைந்து

நடாத்தும்

ஆண், பெண் இருபாலாருக்குமான

**''விவசாய பயிற்சி நெறிகள்''**

- பொதுவிவசாயம்
- ஒட்டுமுறை செய்கை (பழமர விருத்தி)

ஆரம்பமாகின்றன.

தகைமை:- க. பொ. த. (சாதாரண தரம்) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

காலம்:- 03 மாதங்கள்

சனி, ஞாயிறு நாட்களில் மட்டும் பயிற்சி நடைபெறும்.

குறிப்பு: இடம்பெயர்ந்த 25 வயதுக்குட்பட்ட இளைஞர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

பயிற்சியில் கலந்து கொள்ள விரும்புவோர் 05.03 94 சனிக்கிழமை காலை 9 மணிக்கு கல்விச் சான்றிதழ், அண்மையில் பெற்ற நற்சாட்சிப் பத்திரங்களுடன் கீழ்க்காணும் விலாசத்திற்கு நேரில் சமுகம் தரவும்.

**ரி. ஆர். ஆர். ஓ. உப காரியாலயம்**
மானிப்பாய் வீதி,
உரும்பராய். (சி-8740)

சிறு தடங்கலுக்கு வருந்துகிறோம்
**அறிவுக்களஞ்சியம் - 21**
5-3-94 ல் வெளிவரும் (7638)

**நினைவு கூருகின்றோம்..**

**1994. 03. 01**

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் மட்டக்களப்

றது. கைத்தொழில் துறையின் அபிவிருத்திக்காக கைத்தொழில் அபிவிருத்திக் குழு ஒன்று வருகின்றது. இதனது ஒன்று கூடல் திரு இராஜதுரை அவர்களின் தலைமையில் அண்மையில் கிளிநொச்சியில் நடைபெற்றது.

அக்கூட்டத்தில் புதுக்குடியிருப்புப் பகுதியில் ஆமணக்குச் செய்கைக்கு தற்போது

டன.

மேலும் சிறுபோகத்திற்கு கிளிநோச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களில் விதைப்பரம்பல் பற்றியும் ஆமணக்கு சோயா என்பவற்றிலிருந்து குடிசைக் கைத்தொழிலாக எண்ணெய் வடித்தல் நடவடிக்கையை விரிவாக்குவது பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

தங்கள் பங்களிப்பினைச் செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்,

பதிவாளர்

யாழ். பல்கலைக்கழகம்.
யாழ்ப்பாணம்.

(சி-8739)

திரு. செ. கணேஷ் நிர். உறுப்பினர்
திரு. சி. கனகராசா நிர். உறுப்பினர்
திரு. த. ரூபன் ,, ,,
திரு. ம. புனிதசீலன் ,, ,,
செல்வன் ந. குகானந்தராசா ,, ,,

(7645) செயலாளர்

# வைத்திய கலாநிதி சுகந்தன் இன்னாசித்தம்பி அவர்களின்

# ஓராண்டு நினைவலைகள் 01-03-94

சில்லாலையில் வீட்டிற்கு வீடு சித்த வைத்தியர்கள் வெற்றிகரமாக சித்த வைத்தியம் நடாத்திய போதும், பத்துத் தலைமுறையாக தொடர்ந்து வைத்திய பாரம்பரியத்தை நிலை நாட்டி வைத்திய பரம்பரையிலுள்ள நால்வர் ஒருமித்து ஒரு குடையின் கீழ் வைத்தியம் நடாத்திய பெருமை இன்னாசித்தம்பி வைத்திய நிலையத்திற்கு மட்டுமே உரித்தானதாகும். அத்தகைய பரம்பரையின் பத்தாவது வாரிசாகத் திகழ்ந்த டாக்டர் றெஜினால்ட் சுகந்தன் இன்னாசித்தம்பி 47 வயதில் இவ்வுலக வாழ்வை நீத்த செய்தி கேட்டு யாழ் குடாநாடு சோகமயமாகியது. இச்செய்தி பொய்யாக இருக்கக் கூடாதாவென ஏங்கித் தவித்த அன்பு நெஞ்சங்களோ அனந்தம்.

தெளிந்த சிந்தனையும் செயற்திறனும் மக்கள் மனங்களை வெல்லும் தர்க்கவாத ஆற்றலும், இன மத வேறுபாடின்றி யாவருடனும் சாளமாகப் பழகும் பண்பும் கொண்ட அன்னார் சிறந்த வைத்தியராகவும், சமூக சேவையாளராகவும், மக்களால் - குறிப்பாக இளைஞர்களால் - கவரப்பட்ட தலைவனாகவும் விளங்கியதில் ஆச்சரியமில்லை.

இல்லாலை எனும் சிற்றூருக்கு அன்னார் ஆற்றிய சேவைகள் அளப்பரியன. சில்லாலை கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவராக கதிரைமாதா ஆலய பங்குச்சபை செயலாளராக, பாடசாலை அபிவிருத்திச்சபை செயலாளராக அவர் செயலாற்றியது மட்டுமன்றி, நெருக்கடியான காலங்களில் இளைஞர்களின் ஆற்றலை ஒன்றுகூட்டி விழிப்புக்குழு, ஏதிலிகள் பராமரிப்பு அமைப்புகள் போன்றவற்றை இயக்கியும், சில்லாலை கதிரை மாதா ஆலயத்தினதும், சிற்றாலயங்களினதும் வளர்ச்சிக்குப் பங்களித்தும் சில்லாலையில் தனக்கெனத் தனியிடமொன்றைப் பிடித்துக் கொண்டார். இத்தகைய பல பதவிகளை அவர் வகித்த போதும் கிரமமான கூட்டத்தொடர், அவற்றைச் சுவைபடச் செய்யும் விதத்தில் வெவ்வேறு நிகழ்ச்சி நிரல் தயாரிப்பு, ஆவணங்களை ஒழுங்கு முறைப்படி கோவை செய்து பேணல், கூட்டங்களிற்கு நேரந் தவறாது சமுகமளித்தல் தலைமை தாங்கும் தகைமை ஆகிய குணாதிசயங்களை அன்னார் கொண்டிருந்தமையையிட்டு சங்கங்களின் உறுப்பினர்கள் அவரை நயந்து போற்றுவதுண்டு.



இலங்கை வடபிராந்திய சென் - யோன்ஸ் அம்புலன்ஸின் யாழ் மாவட்ட ஆணையாளராக மிக் இளைய வயதிலே இவர் கடமையேற்றமையும் வடஇலங்கை சுதேச வைத்திய சபைச் செயலாளராகச் செயலாற்றியமையும், யாழ் இலங்கை சித்த ஆயுர்வேத வைத்தியக் கல்லூரியின் அதிபராகப் பணி புரிந்தமையும், யாழ் மாவட்ட சமூக சேவைச் செயற்குழுவில் நிர்வாக உறுப்பினராகத் தொண்டு புரிந்தமையும் இலங்கை குடும்பத் திட்டச் சங்கத்தின் யாழ் பிரிவு நிர்வாகியாக இயங்கியமையும் இவரது செயற்திறனுக்கும், சேவைக்கும் எடுத்துக்காட்டுகளாகும்.

இவரின் மறைவு எமது சமூகத்திற்கு மட்டுமல்ல சில்லாலை மக்களுக்கும், சமூகத்திற்கும், சித்த ஆயுர்வேத வைத்தியத் துறைக்கும் பேரிழப்பாகும். இவரது குடும்பத்திற்கு இவர் மரணத்தினால் ஏற்பட்டிருக்கும் இழப்பை வர்ணிக்க வார்த்தைகள் கிடையா.

இவரது பிரிவாற்றாது தவிக்கும் அன்னாரின் குடும்பத்தினர்க்கு எமது அஞ்சலிகளை அர்ப்பணம் செய்வதுடன் இவரின் ஆன்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகிறோம்.

செ. பிரான்சிஸ் சேவியர்

**சில்லாலை மக்கள்** (சி-8742)

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் மட்டக்களப்பில், கல்லடி முகாம் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட வவுணதீவைச் சேர்ந்த 05 தமிழர்கள்.

திருமலை-மூதூர், கட்டைபறிச்சான் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 03 தமிழர்கள்.

1989ஆம் ஆண்டு மட்டு - புல்லுமலைப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய,

**கரன்** (ஞானசேகரம் பாஸ்கரன் - செங்கலடி, ஏறாவூர்-மட்டு)

பொலநறுவையிற் சிறிலங்கா காடையர்களினால் படுகொலை செய்யப்பட்ட 16 தமிழர்கள்.

திருமலையிற் பரீட்சைக்காக வந்தபோது தேசவிரோதக் குழுவினரால் சுட்டுக் கொல்லப்பட்ட க. பொ. த. (சாதாரண தர) மாணவர்களான 2 தமிழிளைஞர்கள்,

யாழ்-பருத்தித்துறை, கந்தமுருகேசனார்வீதி, புத்தூர்ச்சந்தி ஆகிய பகுதிகளில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட குடத்தனை, அல்வாய்ப் பகுதிகளைச் சேர்ந்த 02 தமிழர்கள்.

1991ஆம் ஆண்டு யாழ்-மாவிட்டபுரம் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**சந்திரன்** (சின்னப்பு குணசேகரம் - பாரதிபுரம் மேற்கு)

யாழ்-வீமன்காமம் பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட எறிகணை வெடிவிபத்தில் எமைப் பிரிந்த,

**ரகீம்** (இராசதுரை கருணாகரன் - அராலி வடக்கு வட்டுக்கோட்டை-யாழ்)

1992ஆம் ஆண்டு வவுனியாவில் பல்வேறு முனைகளிலிருந்தும் முன்னேற முயன்ற சிறிலங்கா இராணுவத்தினரை எதிர்த்து மேற்கொள்ளப்பட்ட கடுந்தாக்குதல்களின் போது தவசியாகுளம் பகுதியில் நிகழ்ந்த சமரில் வீரச்சாவெய்திய,

**கப்டன் காண்டீபன்** (கணபதிப்பிள்ளை நாகரத்தினம்-சாஸ்திரிகூழாங்குளம் வவுனியா)

யாழ்-கொடிகாமம், மீசாலை, அல்லாரைப் பகுதியிற் குளத்தில் குளித்துக் கொண்டிருந்தபோது எதிர்பாராதவிதமாக நீரில் மூழ்கியதில் எமைப் பிரிந்த,

**சக்கரபாண்டியன் / மலரோன்**

(வேலாயுதபிள்ளை ஜெயக்குமார் - அல்லாரை தெற்கு, மீசாலை - கொடிகாமம்-யாழ்.)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-8722)

# முன் வரிசையில் நான் இருந்திருப்பின் ஒப்பந்தம் கைச்சாத்தாகியிராது

## —ராஜீவ் காந்தியை தாக்கிய சிப்பாய் தெரிவிப்பு

(கொழும்பு)

முன் வரிசையில் நான் இருந்திருந்தால் இலங்கை—இந்திய ஒப்பந்தம் கையெழுததிடப்பட விட்டிருக்க மாட்டேன்; நான் பின்வரிசையில் இருந்ததினாலேயே அன்று அவ் ஒப்பந்தம் கைெயெழுத்திடப்பட்டது என விஜித றோகண விஜே முனி என்னும் சிறிலங்கா கடற்படையின் முன்னாள் சிப்பாய் கூறியுள்ளார்;

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொழும்புக்கு வந்தபோது அளிக்கப்பட்ட அணிவகுப்பு மரியாதையின்போது துப்பாக்கியின் பின்புறத்தால் அவரைத் தாக்கியவர் விஜித ரோகண விஜே முனி என்பது தெரிந்ததே. தென்மாகாண சபைக்கான தேர்தலில் சிங்கள மகாசம்யுக்த பூமி புத்ர கட்சியின் தலைமை வேட்பாளரான விஜித றோகண விஜே முனி பலப்பிட்டிய பஸ் நிலையத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் மேலும் கூறுகையில்; எமது, நாட்டை அடிமைப்படுத்தும் சாசனத்தில் கையெழுத்திடப் படுவதை தடுக்கும் நோக்கத்துடனேயே ராஜீவ் காந்தியின் மீது தாக்குதலை மேற்கொண்டேன்.

அன்று ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த காமினி, ரணில் போன்றவர்கள் அரசாங்கத்திற்கு வக்காலத்து வாங்கினார்கள். அரசாங்கத்தின் பின் நின்று துதி பாடினார்கள். நான் சிந்தித்தேன். இந்திய ஆக்கிரமிப்பை ஒப்பந்தம் மூலம் ராஜீவ்காந்தி திணிக்க முற்படுவதாக கருதினேன். இதனை ஏற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டது. வடக்கு, கிழக்கு யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவருவதற்காகவே இந்த ஒப்பந்தம் கையெழுத்திடப்படுவதாக கூறப்பட்டது. ஆனால் இதன் மூலம் முழு நாட்டின் நலனும் பாதிக்கப்படும் என்பதை இவர்கள் உணரவில்லை என்றார்.

வாரியபொல பௌத்த பிக்கு கொடியை நாட்ட முற்பட்டார். நான் அதைவிட எனது இனத்திற்கும் நாட்டிற்கும் சேவை செய்துவிட்டு இன்றும் உயிருடன் இருக்கிறேன் எனவும் அவர் குறிப்பிட்டார்;

## யாழ். போதனா வைத்தியசாலை

# லொறி பழுதடைந்ததால் விநியோகம் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலைக்குச் சொந்தமான லொறி பழுதடைந்த நிலையில் இருப்பதாகவும், இதனால் பல அத்தியாவசிய பொருட்களை ஏற்றி இறக்கும் பணி வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் யாழ். போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதனைத் திருத்துவதற்கான உதிரிப் பாகங்கள் கொழும்பில் இருந்து எடுத்துவர இருப்பதால் இன்னும் பல மாதக் கணக்கில் இதனை திருத்த முடியாத நிலை ஏற்படும் எனவும், கொழும்பில் இருந்து வாகன மற்றும் மின் பிறப்பாக்கி உதிரிப்பாகங்களை எடுத்து வருவதில் ஏற்கனவே பல இடர்களை யாழ் போதனா வைத்தியசாலை சந்தித்திருக்கிறது எனவும் அவ் வட்டாரங்கள் சுட்டிக் காட்டின. (நி)

## இன்றையநிகழ்வுகள்

கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று பிற்பகல் இரண்டு மணியளவில் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது, கல்லூரி அதிபர் தலைமையில் இவ் வைபவத்திற்கு நல்லூர் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி. புலேந்திரன் பிரதம விருந்தினராகவும், வைத்திய ஜோதி திலகவதி கோபாலரத்தினம், கல்வி மேம்பாட்டு பேரவையைச்சேர்ந்த அருண் மாஸ்ரர், இணைப்பாறிய உப அதிபர் க, வை. தனேஸ்வரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும்கலந்து கொள்ளவுள்ளனர்,

ஃ ஃ ஃ

சண்டிலிப்பாய் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலை அதிபர்கள் சகலருக்குமான கூட்டம் இன்று பிற்பகல் இரண்டு மணியளவில் யாழ் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது;

ஃ ஃ ஃ

(மானிப்பாய்)

யாழ் பல்கலைக்கழகத்தின் கலைவட்டநிதிக்காக "மௌனத்தீ" எனும் நாடகம் இன்று மேடை ஏற்றப்படுகின்றது பல்கலைக்கழக இறுதி வருட மாணவியான ஜெயரஞ்சனியின் நெறியாள்கையில் மேடையேற்றப்படவுள்ள இந்நாடகம் இன்று பிற்பகல் 4.30 மணியளவில் கைலாசபதி கலையரங்கில் நடைபெற உள்ளமை குறிப்பிடத்தக்கது. (07)

# ஜனாதிபதியின் பேச்சினால் முஸ்லிம்களுக்கும் அதிர்ச்சி

### எம். எச். எம். அஷ்ரப்

(கொழும்பு)

தமிழர்கள் மற்றும் முஸ்லிம் சமூகங்களின் அபிலாஷைகளைப் புறக்கணித்துவிட்டு வடக்கையும், கிழக்கையும் பிரிக்கப் போவதாக ஜனாதிபதி கூறியிருப்பது தமிழர்களை மட்டுமன்றி முஸ்லிம்களையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. இவ்வாறு முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப் கூறியுள்ளார். ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவின் அண்மைக்கால பேச்சுக்கள் தொடர்பாக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள அவர் அதில் மேலும் குறிப்பிடுகையில், தமிழர்கள் முஸ்லிம்களின் மாகாணசபைக் கோரிக்கையை அங்கீகரித்தால் முஸ்லிம் காங்கிரஸ் வடக்கு- கிழக்கு இணைப்பை ஆதரிக்கும் எனவும் தெரிவித்துள்ளார்.

# ஆளும்கட்சி ஆதரவாளர்கள் வங்கிக்கடனைகட்டுவதில்லை

### சபையில் நிமால் சிறிபால டி சில்வா

(கொழும்பு)

அரசாங்கவங்கிகளில் கடன் பெற்று அதனைத் திருப்பிச் செலுத்தாமல் விளையாடிய நூறுக்கும் அதிகமானவர்களின் பெயர் விபரங்கள் என்னிடம் உள்ளது. இவர்கள் யாரென்றால் அனைவரும் ஐ. தே. கட்சியின் ஆதரவாளர்களே. எந்தவிதமான உத்தரவாதமுமின்றி தனிப்பட்ட செல்வாக்கின்கீழ் இவர்களுக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது. தொலைபேசி அழைப்பின்மூலம் கிடைக்கும் உத்தரவின்கீழ் இவர்களுக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான நிமால் சிறிபால டி சில்வா கூறியுள்ளார்.

பாராளுமன்றத்தில் உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில், அரசாங்க வங்கிகளிலிருந்து பெற்ற கடன்களை திருப்பி செலுத்தாதிருப்போருக்கு எதிராக எடுக்கும் நடவடிக்கைகளை நாம் ஆதரிப்போம் எனவும் தெரிவித்தார்.

## அரசின் தேர்தல் மோசடிகள்;

# அன்று யாழ்ப்பாணத்தில் நடந்தது இன்று கிழக்கில் நடக்கிறது

தமிழ் மக்கள் ஜனநாயகத்தில் நம்பிக்கை வைத்து தேர்தல்களில் ஈடுபட்ட போது ஊழல் மோசடிகள் புரிந்து திட்டமிட்ட நடவடிக்கைகள் மூலம் அடாவடித்தனங்கள் புரிந்து தமிழ் இளைஞர்களை ஆயுதம் ஏந்தச் செய்தது போல், கிழக்கில் முஸ்லிம்கள் மத்தியிலும் அடாவடித் தனங்கள் புரிந்து ஜனநாயகத்தில் நம்பிக்கை வைத்திருப்போரை ஏமாற்றி வழிதவறச் செய்து மீண்டும் அனர்த்தங்களை ஏற்படுத்தக்கூடாது என முஸ்லிம் காங்கிரஸ் எம். பி. ஒருவர் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் ஜனநாயகத்தில் நம்பிக்கை வைத்து தேர்தல்களில் போட்டியிட்டனர். ஆனால் யாழ். மாவட்ட தேர்தலில் அடாவடித்தனம் மேற்கொள்ளப்பட்டது. எனவே தமிழ் இளைஞர்கள் ஜனநாயகத்தில் நம்பிக்கை இழந்து ஆயுதம் ஏந்தினர்.

அன்று யாழ்ப்பாணத்தில் நடந்தது. இன்று கிழக்கில் நடக்கிறது கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறும் இச்சமயத்தில் பொலிசார் ஆளும் கட்சியினருக்கு ஆதரவாக செயற்படுகின்றனர். பாரபட்சங்கள் நடக்கின்றனர்; பயமுறுத்தல்கள் விடுக்கப்படுகின்றன. முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர் தாக்கப்படுகின்றனர். சித்திரவதை செய்யப்படுகின்றனர்.

ஆளும் கட்சியினருக்கு எதிராக 19க்குமேற்பட்ட முறைப்பாடுகள் சம்பாந்துறைப் பொலிஸில் செய்யப்பட்டுள்ளன. ஆனால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

முஸ்லிம் காங்கிரஸ் மேடையில் பாடிய 8வயது சிறுமி பயமுறுத்தப்பட்டாள். ஓர் அப்பாவி இளைஞன் பொலிஸ் நிலையத்தில் நிர்வாணமாக்கி சித்திரவதை செய்யப்பட்டுள்ளார்.

தமிழ் மக்கள் ஜனநாயகத்தில் நம்பிக்கை வைத்திருந்த போது திட்டமிட்டுச் செயற்பட்டு ஊழல், மோசடி, அடாவடித்தனம் புரிந்து தமிழ் இளைஞர்களை விரக்தியடையச் செய்து ஆயுதம் ஏந்த வைத்தனர் என மேலும் தெரிவித்தார்.

# ஒய்வூதிய கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

வேலணை ப. நோ. கூ. சங்க கிராமிய வங்கியில் ஓய்வூதியம் பெறுபவர்களிற்கான மாசி மாத ஓய்வூதியக் கொடுப்பனவு தற்பொழுது பணமாக வழங்கப்பட்டுக் கொண்டு இருக்கின்றது. (88)

# வங்கிகளின் மறுசீரமைப்பு 2400 கோடி ரூபா ஒதுக்கீடு

(கொழும்பு)

அரசாங்க வங்கிகளின் மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்காக 2400 கோடி ரூபா செலவிடப்பட இருப்பதாக நீதியமைச்சரும், நிதி இராஜாங்க அமைச்சருமான ஹரோல்ட் ஹேரத் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

கடன் அறவிடல் விசேட ஏற்பாடுகள் திருத்த சட்ட மூலத்தை சபையில் சமர்ப்பித்து உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில், கடன்களை திருப்பிப் பெறுவதில் வங்கிகளும், நிதி நிறுவனங்களும் பெரும் சிரமத்தை எதிர்கொள்கின்றன. எனவே தான் இக்கடன் அறவிடல் சட்ட மூலத்தில் திருத்தம் கொண்டு வரப்படுகிறது. கடன் அறவிடப்படுவதில் காலதாமதம் ஏற்படுவதால் அறவிட முடியாக்கடன்களின் தொகை அதிகரிப்பதாகவும் குறிப்பிட்டார்

# கண்டெடுப்பு

சி. பிறேமனா என்பவரால் 27-02-1994 அன்று ஞாயிற்றுக்கிழமை காலை கோப்பாய் சந்திக்கும் (கோப்பாய் வீதி) கைதடிக்கும் இடையில் சிறு தொகைப் பணம் கறுப்பு நிற கைப்பையுடன் கண்டெடுக்கப்பட்டு எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

# சைக்கிள்கள் வழங்கப்பட்டன

(தென்மராட்சி)

கிளி-பளைக் கல்விக் கோட்டத்திற்கு 30 துவிச்சக்கர வண்டிகள் குறைந்தவிலையில் கிளிநொச்சி கல்விக்கோட்டத்தினால் கடந்த வாரம் வழங்கப்பட்டுள்ளது.

பளைக் கல்விக் கோட்டத்திற்குட்பட்ட ஒவ்வொரு பாடசாலைக்கும் இரு துவிச் சக்கரவண்டிகள் கொடுக்கப்பட்டுள்ளன. கொடுக்கப்பட்டுள்ள சைக்கிள்கள் ஒரு பாடசாலையில் இரு ஆசிரியர்களுக்கு லொத்தர் முறையில் வழங்கப்பட்டது. (86)

# சிங்களவர்களுக்கு மட்டுமே இலங்கை சொந்தமானதல்ல

### பாராளுமன்றில் லக்ஷ்மன் ஜெயக்கொடி

(கொழும்பு)

இந்த நாடு சிங்களவருக்கு... கள் அனுமதித்துள்ளனர் போல் தெரிகின்றது- தேர்த...

# ஆட்சி முறை எப்படி என்பதல்ல இன்றைக்கு உள்ள பிரச்சினை

— எஸ். பாலகிருஷ்ணன்

ளது. உரியவர்கள் ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளவும்.

பாடசாலையில் இரு ஆசிரியர்களுக்கு லொத்தர் முறையில் வழங்கப்பட்டது. (86)

## பாராளுமன்றில் லக்ஷ்மன் ஜெயக்கொடி

(கொழும்பு)

இந்த நாடு சிங்களவருக்கு மட்டும் சொந்தமானது அல்ல தமிழர், முஸ்லிம், பறங்கியர் உட்பட அனைவருக்குமே உரியதாகும். இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினரான லக்ஷ்மன் ஜெயக்கொடி பாராளுமன்றத்தில் பேசும்போது தெரிவித்தார்.

அவசரகால சட்ட நீடிப்பு தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் கிழக்கில் தேர்தல்கள் அமைதியாக நடக்க புலிகள் அனுமதித்துள்ளனர் போல் தெரிகின்றது- தேர்தலின் பின்னர் பிரதேச சபைகள் தகுந்த முறையில் இயங்குவதை அனுமதிப்பார்களா?

நீண்டகாலம் இழுபடும் தேசிய பிரச்சினைக்கு தீர்வு காண முயல வேண்டும். ஆனையிறவு பாதை மட்டுமல்ல கிளாலி, பூநகரி உட்பட யாழ்ப்பாணத்திற்கான பிரதான பாதைகளும் திறக்கப்பட்டு மக்கள் சுதந்திரமாக நடமாட அனுமதிக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

## இலங்கைக்கு உள்ள பிரச்சினை

- எஸ்.பாலகிருஷ்ணர்

(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரங் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையா அல்லது வெஸ்ட் மினிஸ்டர் பாணியிலான பாராளுமன்ற ஆட்சி முறையா அவசியம் என்பது இன்றுள்ள பிரச்சினையே அல்ல. பல்லினப்பாங்கையும் சமூகயதார்த்தங்களையும் புரிந்துகொள்ளக்கூடிய அரசியல் நடைமுறைகளுக்கு ஏற்ற அரசியல் யாப்பு முறையொன்றின் மூலமே இன்று நாடு எதிர்நோக்கும் பிரச்சினைக்கு தீர்வுகாண முடியும். இவ்வாறு இலங்கையின் அரசியல் யாப்பு சீர்திருத்தத்திற்கானஒருஉருவ அமைப்பு என்ற தலைப்பில் கொழும்பில் லங்கா ஒபரோய் ஹோட்டலில் நடைபெற்ற கருத்தரங்கில்கலந்துகொண்டு உரையாற்றிய எஸ். பாலகிருஷ்ணர் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில், நிறைவேற்று அதிகாரங்கள் ஜனாதிபதியிடமா அல்லது பாராளுமன்றத்திடமா இருக்க வேண்டும் என்பது அண்மைக்காலத்தில் விவாதத்திற்கு உரியதொரு விடயமாகியுள்ளது 1978-ம் ஆண்டின் அரசியல் யாப்பு அரசியல் சக்திகளை இரண்டு பிரிவுகளாகப் பிரித்து விட்டது. ஒருதரப்பினர் 'வெஸ்ட் மினிஸ்டர்' 'பாணியிலான பாராளுமன்ற ஆட்சி முறைக்கு ஆதரவு காட்டுகின்றனர்; மறுதரப்பினர் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி ஆட்சி தொடரவேண்டும் என்கின்றனர். இந்த மாற்றங்கள் தொடர்பான சிந்தனைகள் பின்வரும் இரண்டு அம்சங்களையும் அடிப்படையாக கொண்டுள்ளன

இலங்கையின் அரசியல் நிர்வாக அதிகாரத் தன்மைமாற்றப்பட்டு ஜனநாயகத் தன்மையைஉறுதிப்படுத்தக்கூடிய மாற்றங்கள் என்ன? தேசிய அரசியலில் அரசுகளின் பேரினவாத நிலைப்பாட்டின் காரணமாக சிறுபான்மையினரின் நலன்களுக்காக மேற்கொள்ளப்பட வேண்டிய மாற்றம் என்ன? இவற்றின் அடிப்படையிலேயே இந்தவிடயம் அணுகப்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.


## தேவை

நில விரிப்புகள் (Floor Carpets )இயற்கை காட்சிகளுடனான சுவர் ஓவியங்கள் (Wall Papers) என்பன தேவைப்படுகின்றன- விலைவிபரங்களுடன் கடிதம் மூலம் 15-03-94க்கு முன் தொடர்பு கொள்ளவும்.

விளம்பர இல:- 314
மே/பா ஈழநாதம்
யாழ்ப்பாணம்.

(7632)


கோழி முட்டையில் இறகு எடுக்குமாறு

# மலையக மக்களிடம் கோருகிறது ஆட்பதிவுத் திணைக்களம்

### சபையில் முத்து சிவலிங்கம் வர்ணனை

(கொழும்பு)

கோழி முட்டையில் இறகு கேட்பதுபோல மலையக மக்களுக்கு அடையாள அட்டை வழங்கும் விடயத்தில் ஆட்பதிவுத் திணைக்களம் நடந்து வருவதாக இ. தொ. காவின் பாராளுமன்ற உறுப்பினரான முத்து சிவலிங்கம் சபையில் உரையாற்றும்போது தெரிவித்தார்.

அவசரகால சட்ட நீடிப்பு தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில், மலையக மக்கள் அடையாள அட்டை பெறுவது குதிரைக் கொம்பாகிவிட்டது. விண்ணப்பப் படிவம் பெறுவதற்காக தோட்டத் துரையிடமும், கிராம அதிகாரியிடமும் மாறிமாறி அலைய வேண்டிய நிர்ப்பந்தத்தில் அவர்கள் இருக்கின்றனர்.

மஸ்கெலியாவைச் சேர்ந்த வள்ளியம்மா என்னும் க. பொ. த. (சா|த) வகுப்பு மாணவி 92-ம் ஆண்டில் விண்ணப்பித்தபோது தகப்பனின் அடையாள அட்டை தொலைந்திருந்ததாகக் கூறி அதற்கான பொலிஸ் அறிக்கையையும் இணைத்து அனுப்பியிருந்தார். ஆனால் ஆட்பதிவு திணைக்களம் அந்த விண்ணப்பத்தை நிராகரித்து விட்டது. தகப்பனின் அடையாள அட்டையையும், 1949க்கு முன்னர் தகப்பன் இங்கு வாழ்ந்தமைக்கான ஆதாரத்தையும் கொண்டுவரும்படி திணைக்களம் பணித்தது. அதுபோல மஸ்கெலியாவைச் சேர்ந்த பாலசுப்பிரமணியன் 92-ம் ஆண்டில் செய்த விண்ணப்பமும் நிராகரிக்கப்பட்டது. 1983-ம் ஆண்டு கலவரத்தின் போது காணாமற்போன அவரது தந்தையின் மரணச் சான்றிதழை காட்டுமாறு திணைக்களம் கோரியுள்ளது. இவற்றை பார்க்கும்போது கோழி முட்டையில் இறகு கேட்பது போலிருக்கிறது எனத் தெரிவித்தார்.

### சீனி விநியோகம்

வேலணை ப. நோ. கூ. சங்கம் தனது பாவனையாளரில் ''உ'' அட்டையை உடையவர்களிற்கு சீனி அட்டை ஒன்றிற்கு இரண்டு கிலோ, ஒரு கிலோ ரூ30.50 படி கடந்த சனிக்கிழமை தொடக்கம் வழங்கி வருவதோடு மேற்படி சங்கத்தின் ''உ'' அட்டையை உடையோரிற்கு அட்டை ஒன்றிற்கு மேலதிகமாக இரண்டு கிலோ சீனி ஒரு கிலோ ரூ 38/- வீதம் ஞாயிறு தொடக்கம் விநியோகிக்கின்றது. அத்துடன் மேற்படி சங்கத்தின் மக்கள் கடை மூலம்மலிகிலோ ரூ 50-வாகவும் மற்றும் பால்மா வகைகள் கட்டுப்பாட்டுவிலைக்கு தமது பாவனையாளரிற்கு மட்டும் விநியோகித்து வருகிறது. (88)

# இலங்கையில் முதலிடுவதில் இந்தியர்கள் ஆர்வம்

இந்திய கைத்தொழிலதிபர்கள் இலங்கையில் முதலீடுகள் செய்வதில் ஆர்வம் கொண்டுள்ளனர். அமைச்சரவையின் அங்கீகாரம்பெற்ற பின்னர் இந்திய தனியார் துறையினரின் பாரிய முதலீட்டு திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

கொழும்பில் முதலீட்டு சபையின் பேச்சாளர் ஒருவர் இதுபற்றி மேலும் கூறுகையில், ஜனவரியிலும் பெப்ரவரியிலும்இந்தியகைத்தொழிலதிபர்கள் சமர்ப்பித்த முதலீட்டுத் திட்டங்கள் முதலீட்டு சபையினதும் அமைச்சரவையினதும் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளன.

இந்தியாவின் பிரபல புடவை உற்பத்தியாளர்களான அரவிந்த் மில்ஸ் நிறுவனம் 69கோடியே 29 இலட்ச ரூபா செலவில் பியகம சுதந்திர வர்த்தக வலயத்தில் புடவை ஆலை ஒன்றைக் கட்ட இருக்கிறது. மேலும் ரூபா நான்கு கோடி செலவில் உருக்கு தொழிற்சாலை ஒன்றும், ரூபா எட்டுக்கோடி செலவில் ஆஸ்பெஸ்டஸ் கூரைத் தகடுதொழிற்சாலை ஒன்றும் இந்தியமுதலீட்டாளர்களால் ஆரம்பிக்கப்படவுள்ளது.

மேலும் புதுடில்லியில் இயங்கும் இந்திய கைத்தொழில் சம்மேளனத்தை சேர்ந்த 16 பெரிய கம்பனிகளின் உயர்மட்டத் தூதுக்குழு ஒன்று எதிர்வரும் வியாழனன்று கொழும்புக்கு விஜயம்செய்யவுள்ளது. மூன்று நாட்கள் தங்கியிருக்கும் இத் தூதுக்குழு இலங்கையில் முதலீடு செய்வதுபற்றி அரசாங்கத்துடன் பேச்சு நடத்துவதுடன் முதலீடுகளுக்கான சாத்தியம் பற்றியும் ஆராயவுள்ளது.


## 11-ம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு
9-08-1977

வீரச்சாவு
19-02-1994

### கப்டன் அறிவழகன் (அறிவு)

(யேசுராசா றொபின்சன்)
(மயிலிட்டி)

சிறுவயதினிலே சிந்தனை பெற்றவனே
சுதந்திரக்காற்றை சுவாசிக்க எழுந்தவனே
சென்ற பாதையிலே சிந்தையெல்லாம் பதித்தவனே
நன்று நண்பா நாமுமது வழி!

இடம் பெயர்ந்த மயிலிட்டி
கடற்றொழிலாளர் ஒருங்கிணைப்புச்சங்கம்

(7585)

# கச்சதீவை மீளப் பெறுவதில் ஜெயலலிதா அரசு ஆர்வம்

கச்சதீவைமீண்டும்இந்தியா தனதாக்கிக் கொள்வதன் மூலம் மாத்திரமே இலங்கை கடற்படையின் தாக்குதல்களிலிருந்து தமிழக மீனவர்களை பாதுகாக்க முடியுமென்று ஜெயலலிதா அரசாங்கம் கருதுவதாக கூறப்படுகின்றது.

தமிழக மீனவர்கள் தாக்கப்படும் சம்பவங்களால் தமிழகத்தில் பதற்றநிலை அதிகரித்து வருவதாகவும், இந்திய மீனவர்களின் உரிமை வென்றெடுக்கப்பட வேண்டுமென்னும் கோரிக்கை வலுப்பெற்று வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

வெறும் வார்த்தைகளால், அல்லது பரிவு காட்டும் வகையிலான உறுதி மொழிகளால் உருவகிக்கப்படும் எந்தவொரு இணக்கப்பாடும் தமிழக மீனவர்களை திருப்திப்படுத்தப் போவதில்லை என்பதையே முதல்வர் ஜெயலலிதாவின் இராமநாதபுரப் பேச்சு உணர்த்துவதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

# மசூதி கொலையை அடுத்து பேச்சுக்கள் முறிவடைந்தன

## இஸ்ரேல் வானொலி அறிவிப்பு

வாசிங்டனில் இஸ்ரேலுடனான அமைதிப் பேச்சுக்களில் ஈடுபட்டிருந்த மூன்று அரபு நாடுகளின் தூதுக்குழுக்கள் ஏப்ரோன் மசூதிப் படுகொலையை அடுத்து தமது பேச்சுக்களை முறித்துக் கொண்டிருப்பதாக இஸ்ரேலிய வானொலி கூறியுள்ளது.

சிரியா, லெபனான், ஜோர்தான் நாடுகளின் தூதுக்குழுக்கள் தமது பேச்சுவார்த்தைகளை முறித்துக் கொண்டு தாயகத்திற்கு திரும்பி விட்டதாகவும் மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# இஸ்ரேலிய நடவடிக்கை நம்பிக்கை ஊட்டவில்லை

## யாசிர் அரபாத் தெரிவிப்பு

(டுனிஸ்)

ஆக்கிரமிக்கப்பட்ட அரபுப் பிரதேசங்களில் இஸ்ரேலினால் குடியேற்றப்பட்ட யூதர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்னும் இஸ்ரேலியஅமைச்சரவையின் அறிவிப்பு நம்பிக்கை ஊட்டுவதற்கு போதுமானதல்ல என்று பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசீர் அரபாத் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், சுயாட்சி பற்றி இஸ்ரேலுடன் தொடர்ந்து விவாதம் நடத்த இயலுமா என்பது பற்றி விவாதிக்க பாலஸ்தீனிய செயல்கமிட்டி டுனிசில் தனது கூட்டத்தை தொடங்கியிருப்பதாகவும் தெரிவித்தார்.

இதனிடையே ஆக்கிரமிப்பு பிரதேசங்களில் மூன்றாவது நாளாகவும்நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களில் ஐந்து பாலஸ்தீனியர் கொல்லப்பட்டதுடன் மேலும் பலர் காயமடைந்துள்ளனர்.

ஏப்ரோன் மசூதியை தகர்க்க முயன்ற 2000க்கும் அதிகமான ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர்.

# தமிழ்மக்களின் நலனுக்காகவே செயற்படுவேன் தன்னலத்திற்கல்ல

## - மு. கருணாநிதி

(சென்னை)

என் இதயநாளம், ரத்தச் சுழற்சி, மூச்சு எல்லாம் தமிழ் தமிழ்நாடு, தமிழ் மக்களின் நலன் என்று செயற்படுமே அல்லாமல் தன்னலத்திற்காக அல்ல. இவ்வாறு தி.மு.க. தலைவர் மு. கருணாநிதி தெரிவித்துள்ளார்.

அண்மையில் சென்னையில் அகத்தியர் திருமண மண்டபத்தில் திருமண விழா ஒன்றை நடத்தி வைத்து உரையாற்றிய அவர் அங்கு பேசுகையில்; மேலும் தெரிவித்ததாவது.

இன்று மக்களுக்காகப் பாடுபட ஒரு இயக்கம் வேண்டுமே என்றால் அதுதான் தி.மு.க. இதற்கான அடித்தளமிட்டவர் தந்தை பெரியார் அரசியல் ரீதியாக வழி நடத்தியவர் அறிஞர் அண்ணா.

கருணாநிதி தமிழர்களுக்காகப் பாடுபடக்கூடியவனா? கருணாநிதி தமிழனைக் காட்டிக் கொடுத்துவிட்டானா? எனக்கு தமிழ் உணர்வு இல்லையா! இவ்வாறு எல்லாம் கூறுமளவுக்கு சிலருக்கு இன்று துணிச்சல் ஏற்பட்டுவிட்டது. அந்த அளவுக்கு நாடு கெட்டுவிட்டது. இதற்காக அவர்களைத் தாக்க வேண்டும் என்பது பொருள் அல்ல, வசிட்டர் வாயாலேயே பிரம்மரிஷி பட்டம் பெற்றது போல அண்ணாவே எனக்கு நற்சான்றிதழ் கொடுத்துள்ளார்; தண்டவாளத்தில் படு என்றாலும், அமைச்சர் பதவி என்றாலும் இரண்டையும் ஒன்றாக கருதுபவன் தம்பி கருணாநிதி என்று அண்ணா கூறியுள்ளார்; அதில் எனக்கு எந்த வித மாற்றமும் இல்லை.

ராஜிவ்காந்தி கொலை வழக்கில் 40 பேர் கைது செய்யப்பட்டு வழக்கும் விசாரணை நடக்கிறது. ராஜிவ் கொலைக்கு தி.மு.க. தான் காரணம் என்று பொய், பிரசாரம் செய்து நீங்களும் அதை நம்பி 234 தொகுதிகளிலும் என்னைத் தவிர எல்லோரையும் தோற்கடித்தீர்கள். கருணாநிதி இப்படிச் செய்வானா என்று எண்ணிக் கூடப் பார்க்காமல் தோற்கடித்தீர்கள்.

ஆனால் இப்போது நீதிமன்றத்தில் குற்றம் சாட்டப்பட்டவர்களில் தி.மு.க.வைச் சேர்ந்த ஒருவர் கூட இல்லை எனவும் குறிப்பிட்டார்.

# வெளிநாட்டு பத்திரிகையால் இறைமைக்கு ஆபத்து

(டில்லி)

இந்தியாவில் விற்பனை செய்யப்படும் வெளிநாட்டுப் பத்திரிகைகளால் இந்தியாவின் இறைமைக்கும் அதன் கலாசாரத்திற்கும் பாதிப்பும் அச்சுறுத்தலும் ஏற்பட்டிருப்பதாக பிரபல எழுத்தாளரும் பத்திரிகையாளருமான ஜம்னாதாஸ் அக்தார் தெரிவித்துள்ளார்.

புதுடில்லியிலுள்ள உயர் நீதிமன்றத்தில் இவர் எழுத்து மூலம் இது தொடர்பான புகார் மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார். இது பற்றிய விசாரணைகளை இந்திய உயர்நீதிமன்றம் ஆரம்பித்துள்ளது.

# யூதர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்

(டெல் அவிவ்)

இஸ்ரேலினால் ஆக்கிரமிக்கப்பட்ட அரபுப் பிரதேசங்களில் குடியேற்றப்பட்டுள்ள யூதர்களுக்கு எதிரான சில நடவடிக்கைகள் பற்றி இஸ்ரேல் அரசு அறிவித்துள்ளது.

மேற்குக் கரை நகரமான ஏப்ரோனில் மசூதி ஒன்றில் பாலஸ்தீனியர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தை தொடர்ந்து இந்நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் இது தொடர்பாக விசாரணை நடத்தப்படும் என்றும் பெரும்பாலான யூதக் குடியேற்றவாசிகளிடம் இருக்கும் ஆயுதங்கள் களையப்பட நடவடிக்கை எடுக்கப்படுமென்றும், இஸ்ரேலிய அமைச்சரவை தெரிவித்துள்ளது.

## சிறுநீரக விற்பனை மோசடி

(சியோல்)

சிறுநீரக மாற்றுச் சத்திர சிகிச்சைக்கென சட்டவிரோதமாக சிறுநீரகங்களைப் பெருமளவில் பணத்திற்கு விற்பனை செய்யும் மோசடி ஒன்று இப்போது அம்பலமாகியுள்ளது.

# ஜனவரி மாத ஒளிவீச்சு புதனன்று திரையிடப்படும்

'நிதர்சனம்' தயாரித்து வழங்கும் மாதாந்த வெளியீடான ஒளிவீச்சு ஜனவரி 94 வெளியீடு அண்மையில் வெளிவந்துள்ளது இது தளபதி கேணல் கிட்டு அவர்களின் நினைவு சிறப்பு வெளியீடாகும். இவ் வெளியீட்டில் வங்கக் கடலில் காவியமான கேணல் கிட்டு உட்பட பத்து வீரவேங்கைகளின் முதலாம் ஆண்டு நினைவுதினம், தைத் திருநாள் கொண்டாட்டம், விமானக் குண்டுவீச்சு அழிவுகள் என்பன உட்பட மற்றும் பல சுவையான அம்சங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. இது நாளை மறுதினம் பிற்பகல் ஆறுமணியளவில் கைலாசபதி கலையரங்கில் அகன்ற திரையில் காண்பிக்கப்படவுள்ளது.

# சிவராத்திரியை முன்னிட்டு போட்டிகள் நடத்தஏற்பாடு

மகாசிவராத்திரி விழாவை முன்னிட்டு யாழ்ப்பாணஇந்து சமயப்பேரவை வலி தெற்கு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவ மாணவியருக்கிடையேயான இந்துசமய பேச்சுபோட்டி ஒன்றை நடாத்தவுள்ளது.

மருதனார் கோட்டக்கல்வி அலுவலகத்தின் அனுசரணையுடன் இப்போட்டி ஆரம்ப, மத்திய, மேல், அதிமேல் என்னும் நான்கு பிரிவுகளாக நடத்தப்படும் ஒவ்வொரு போட்டியிலும் முதல் மூன்று இடங்களையும் பெறுபவர்களுக்கு பத்தாம் திகதி இரவு சுன்னாகம் கதிரமலை சிவன் கோவிலில் நடைபெறும் சிவராத்திரி விழாவில் பரிசில்கள் வழங்கப்படுமெனவும், விண்ணப்பங்கள் யாவும் ஏழாம்திகதிக்கு முன்பாக அதிபருக்கு ஊடாக பேரவைச் செயலாளருக்கு அனுப்பப்பட வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# இலவச பாடநூல் விநியோகம் பூர்த்தி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட சகல கல்விக் கோட்டங்களிற்கும் இலவசப் பாடப்புத்தகங்களின் விநியோகம் முடிவடைந்து விட்டதாக யாழ். கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனை அடுத்து ஒவ்வொரு கல்விக் கோட்டமும் தமது பகுதிக்குட்பட்ட பாடசாலைகளுக்கு இலவசப் பாடநூல்களை விநியோகிக்கவுள்ளன என அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (பா)

## இலவச வகுப்புகள் ஆரம்பிக்கப்படும்

(குருநகர்)

கேக் ஐசிங், பூவேலை சிகை அலங்காரம், விஞ்ஞானமுறையில் உடைதயாரித்தல்போன்ற இலவச வகுப்புகளை யாழ் மறைவட்டமனித முன்னேற்ற நடுநிலையம் ஆரம்பிக்கஇருப்பதாக தெரிவிக்கப்படுகிறது

---

# சித்தாயுர் வேத வரலாற்றில் ஓர் பதிவு

## வைத்திய கலாநிதி சுகந்தன்இன்னாசித்தம்பி

வாழ்க்கையிலே மகிழ்ச்சியைப் பெறவும் நீண்ட காலம் முழுமையான வாழ்வு வாழவும் அதைத் தொடர்ந்து மெய் ஞானம் அடையவும் உடலின் உதவி தேவை ஆகையால் உடல் உறுதி பெறத்தக்க வழிவகைகளை அறிந்துஅவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும் அல்லாவிடில் மறுமை ஞானமும் நனவானது இல்லை. இதையிட்டு திருமூலர் என்னும் சித்தர் பின்வருமாறு கூறுகின்றார்.

உடம்பால் அழியின் உயிரால் அழிவர்
திடம்பெற மெய்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தேன்
உடம்பினை முன்னர் இழுக்கென்றிருந்தேன்
உடம்பினுக்குள்ளே ஒரு பொருள் கண்டேன்
உடம்பிலே உத்தமன் கோவில் கொண்டான்

# சித்தாயுர் வேதத்தின் மும்மணிகள்

கள் என் நாட்டை ஆளுகின்ற மன்னன் நல்ல இயல்புடையசெங்கோலோச்சுகிறவன் என்ஊரில் வாழ்பவர்கள் கூட பண்பிலும் அறிவிலும் ஒழுக்கத்

இவ் வைத்திய முறையால் இடுப்புக்குக் கீழ் வரும் பாரிசவாதநோய் குணமாகும் (5) நசியம் — மூலிகை சாற்றை எடுத்து மைநிரப்பி மூலம் மூக்கின் ஒரு துவாரத்தை அமர்த்திக்கொண்டு மறுதுவாரம் வழியாக சொட்டு சொட்டாக நோயாளிக்குச் செலுத்தப்படுகின்றது. இம்முறையால் நாற்பட்ட தலைவலி, பீனிசம் முதலியன நிவர்த்தியாகும்.

மேற்கூறப்பட்ட இரு துறையினரும் வைத்திய முறையில் சதுர்பாதங்கள் என அழைக்கப்படும் வைத்தியர், பரிகாரகர், நோயாளி, மருந்து என்னும் நான்கும் தரமாக இருந்தால் தான் சிகிச்சை சித்திக்கும் என்ற கூற்றில் கருத்து வேறுபாடற்றவர்களாக விளங்கினர்.

இலங்கையின் தேசிய வைத்தியத்துறை

# சித்தாயுர் வேதத்தின் மும்மணிகள்

யிட்டு திருமூலர் என்னும் சித்தர் பின்வருமாறு கூறுகின்றார்.

உடம்பால் அழியின் உயிரால் அழிவர்
திடம்பெற மெய்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தேன்
உடம்பினை முன்னர் இழுக்கென்றிருந்தேன்
உடம்பினுக்குள்ளே ஒரு பொருள் கண்டேன்
உடம்பிலே உத்தமன் கோவில் கொண்டான்
என் உடம்பினை நானிருந்து ஓம்புகின்றேன்.

இவ்வாறு பாடியதன் மூலம் நீண்டகாலம் உயிர் வாழ்வதற்கும் வாழ்வின் இன்பங்களை பூரணமாக அனுபவிப்பதற்கும் உடல் ஓர் முக்கிய காரணி என்பதை விளக்கவே ஆகும்.

இவ்விதமான உடலை நரை திரை மூப்பு முதலியவற்றில் இருந்து பாதுகாக்கும் பொருட்டே சித்தர்கள் சுதேச வைத்திய துறையை உருவாக்கினார்கள். இச் சுதேச வைத்திய முறை சித்த, ஆயுர் வேதம் என இரு பெரும் பிரிவுகளை கொண்டவையாக இருப்பினும் சுதேச மருத்துவ குடும்பத்தில் இவை இரண்டிற்கும் சம பங்கு உண்டு.

''மிகினும் குறையினும் நோய் செய்யும் நூலோர் வளி முதலாய் எண்ணிய மூன்று என வள்ளுவ பெருந்தகை கூறிய வாத, பித்த, கப முதலான மூன்று பொருட்களும் தம் நிலையில் இருந்து கூடினாலும் குறைந்தாலும் நோயை உண்டாக்கும் என்னும் கருத்தில் சித்த ஆயுர்வேத இரு சாராருமே ஒத்த கருத்துடையவராக இருந்தனர். இத்துடன் கூடவே இவர்கள் கண்ணுக்கு தெரியாத உணர முடியாத ஐம் பெரும் பூதங்கள் உள்ளன என்றும் அவையாவன பிருதுவி, அப்பு தேயு, வாயு, ஆகாயம் ஆகியவை எனவும் இவற்றிற்கும் நாம் முன் கூறிய வாத, பித்த, கபம் என்னும் மும்மணிகளுக்கும் தொடர்பு உண்டு எனவும் நம்பினர். எப்படியெனில் வாதம் எனப்படும் கண்ணுக்கு தெரியாத பொருள் வாயு ஆகாயம் என்னும் பூதங்களினாலும் பித்தம் என்னும் பொருள் தேயு, அப்பு என்னும் பூதங்களினாலும் கபம் என்னும் பொருள் பிருதுவி, அப்பு என்னும் பூதங்களினாலும் ஆக்கப்பட்டதின் மூலம் இவை இரண்டிற்கும் உள்ள தொடர்பு காட்டப்படுகின்றது.

உடல் நோய்களுக்கு மருந்து கண்ட சித்தர்கள் அன்றே உடலுக்கும் உள்ளத்திற்குமான தொடர்பையும் அறிந்திருந்ததுடன் நல்லொழுக்கமும் மனமகிழ்ச்சியும் கூட நீடிய இளமை பொருந்திய வாழ்விற்கு ஆதாரம் என கண்டனர். இதற்கு உதாரணமாக புறநானூறு எனும் பண்டைய நூலில் அரசர் கோப்பெரும் சோழனாரை பிசிராந்தையார் என்னும் புலவர் சந்திக்கச் சென்றபோது நடந்த சம்பவத்தைக் கூறலாம். அதாவது மன்னனைக் காணச்சென்ற புலவர் பெருமானாரை அவையில் இருந்த அனைவரும் வியந்து நோக்கினர். காரணம்புலவரோ வயது மிக முதிர்ந்தவர் இருப்பினும் நரை திரை அற்று இளமைத் தோற்றத்தினராய் தோற்றம் அளித்தார். இதன் இரகசியம் என்னவென அவையில் இருந்தோர் வினவ புலவர் பெருமான் பின்வருமாறு பதில் இறுத்தார். அதாவது ''என் மனைவி நற்பண்புகள் நிறையப் பெற்றவள் என் மக்கள் அறிவால் நிரம்பியவர்கள் என் சேவகர்கள் என் கருத்தை அறிந்து நடக்கும் உசுந்த பண்பை உடையவர்கள் என் நாட்டை ஆளுகின்ற மன்னன் நல்ல இயல்புடையசெங்கோலோச்சுகிறவன் என்ஊரில் வாழ்பவர்கள் கூட பண்பிலும்அறிவிலும்ஒழுக்கத்திலும்உயர்ந்த சான்றோர். இதை செவிமடுத்த அவையில் இருந்தோர் புலவரின் இளமைத் தோற்றத்திற்கு வீட்டிலும் நாட்டிலும் நிலவிய அமைதியும் அதனால் அவர் அனுபவிக்கும் மன மகிழ்ச்சியுமே காரணம் என அறிந்தனர். அன்று மட்டுமல்ல இன்று கூட எமது சித்த ஆயுர்வேத வைத்தியர்கள் நோயாளியின் உடல் நிலையை பரிசீலிப்பதுடன் மட்டும் நின்றுவிடாது அவரின் மனோ நிலையையும் அவதானித்து சிகிச்சை வழங்குவர்.

நம் மனநிலைக்கும் உடலுக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதைக் கண்ட சித்தர்கள் நல்லொழுக்கமே மன அமைதிக்கு மூலகாரணம் என கருதி அன்று ஒழுக்கத்திற்கான வழி வகைகளை கூறும் நூல்களையும் திரிகடுகம், பஞ்சமூலம், ஏலாதி போன்ற மருத்துவ பெயராலேயே வெளியிட்டுள்ளார்கள்.

சித்த ஆயுர்வேத வைத்திய முறைகளில் தத்துவபகுதிகளை பொருத்தளவில் பெருமளவு வித்தியாசங்கள் இல்லாவிடினும் மருந்து தயாரிப்பு முறையில் சிற்சில வித்தியாசங்களை அவதானிக்கலாம். உதாரணமாக சித்த வைத்திய முறையை முதலாவதாக எடுத்துக்கொண்டால் சித்த வைத்திய துறையினர் இரசம், கெந்தகம், உபஇரசம் இவற்றை விவு மருந்துகளாக்கி அவற்றுடன் முப்பு எனப்படும் பூநீறு கலந்து

> 6 - 9 - 1979இல் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஒலிபரப்பில் இரவு 7.45 - 8.00 மணிவரை அஞ்சல் செய்யப்பட்ட காலம் சென்ற வைத்திய கலாநிதி சுகந்தன் இன்னா சித்தம்பியின் வானொலி உரை.
>
> அவரின் 1ஆம் வருட நினைவு நாளை முன்னிட்டு இக் கட்டுரை பிரசுரமாகின்றது.

உலோகங்களை அனுத்துவமாகசெந்தூரித்தோ, பஸ்பமாக்கியோ கொடுப்பதன் மூலம் தமது வைத்திய முறையை பேணி வந்தனர். இத்துறையினரின் மற்றும் ஒரு விஷேச அம்சமாக நம் முன்னோர்கள் பல சமயங்களிலும் பல இடங்களிலும் இம் முறையைப் பற்றி எழுதி வைத்துவிட்டுப் போன ஏட்டுச்சுவடுகள் அனைத்தும் தமிழில் காணப்படுவதே. மேலும் இவர்கள் வைத்தியம், இரசவாதம், யோகம், ஞானம் என்றும் சொல்லப்படும் நான்கு பொருட்கள் மூலமாக நோய்களை வராது தடுக்க வரும் பொழுது காக்க, வந்தபின் நீக்க வேண்டிய வழி வகைகளை ஆராய்ந்தனர்.

அடுத்ததாக ஆயுர்வேத துறையினரை எடுத்துக் கொண்டால் அவர்கள் பெரும்பாலும் மூலிகைகளை நீரில் அவித்து செய்யப்படும் கசாயங்களை அரிஷ்டம், ஆசவம் எனப்படும் பக்குவம் செய்யப்பட்ட மருந்துகளோடு கொஞ்ச வெல்லமும் கலக்கப்பட்டு பூமிக்கு



அடியில் உமிபுடம் போடப்பட்ட நிலையில் 45 நாட்கள் பாதுகாக்கப்படுகின்றன. இதன் விளைவால் அம் மருந்துகளுக்கு நாலு முதல் பத்து சதவீதம் மதுசாரத் தன்மை தாமாகவே வந்து சேருகின்றன. இத்தன்மையால் நெடுங்காலம் அந்த மருந்துகள் கெடாமல் இருக்கும் வாய்ப்பும் உண்டாகின்றது. இம் மருத்துவத்துறையினரின் பண்டைய குறிப்புக்கள் அனைத்தும் சமஸ்கிருத மொழியிலேயே அமைந்துள்ளன. இவ் வைத்தியத் துறையினரின் ஒரு சிறப்பு அம்சமாக பஞ்ச கர்ம வைத்திய முறை அமைந்துள்ளது. அதாவது (1) பிழிச்சல் எனப்படும் (Massaging) முறை இதில் 15 நாட்களுக்கு நோயாளியின் உடம்பில் எண்ணெய் பூசி பின்னர் குளிக்க வைக்கிறார்கள். (2) தாரா — நோயாளியின் தலைக்கு நேரே கீழ்ப்புறத்தில் ஓட்டைகள் உள்ள எண்ணெய் நிறைந்த பானையைக் கட்டித் தொங்கவிடுவர். பானையில் உள்ள எண்ணெய் கீழுள்ள துவாரங்கள் வழியாக நோயாளியின் வலியுள்ள பகுதிகளில் சீரான அளவில் இறங்கும் இதன் மூலம் கடுமையான தலைவலி போன்ற உபாதைகள் தீரும். (3) நவாக்கிழி — நவர அரிசி எனப்படும் ஒருவகை அரிசியைசிறுதுணி மூட்டைகளில் கட்டி தயாராக வைத்திருப்பர். பாலும் கஷாயமும்சேர்ந்த கலவையை நோயாளியின்பக்கத்திலேயே ஓர் அடுப்பில் சூடேற்றுவார்கள். அது சூடாகும் பொழுது இம் மூட்டைகளை ஒவ்வொன்றாக கலவையில் வேகவைத்து இளம் சூட்டில் நோயாளியின் உடலில் பிழிந்து ஒத்தனம் பிடிப்பர். (4) வஸ்தி — இதில் மருத்துவ மூலிகைகளை அரைத்து தேனில் அல்லது விளக்கெண்ணெயில் கலந்து எனிமா கொடுப்பது போல் செலுத்துகிறார்கள். மிகச் சிறந்த சுகபேதி முறையாக இது கருதப்படும். (5) ... யின் நிவர்த்தியாகும்.

மேற்கூறப்பட்ட இரு துறையினரும் வைத்திய முறையில் சதுர்பாதங்கள் என அழைக்கப்படும் வைத்தியர், பரிசாரகர், நோயாளி, மருந்து என்னும் நான்கும் தரமாக இருந்தால் தான் சிகிச்சை சித்திக்கும் என்ற கூற்றில் கருத்து வேறுபாடற்றவர்களாக விளங்கினர்.

இலங்கையின் தேசிய வைத்தியத்துறையின் மறுமலர்ச்சியில் பரராஜசேகர மன்னனும், செகராஜசேகர மன்னனும் ஆற்றிய தொண்டு அளப்பரியது. இவர்களின் காலத்தின் பின்னர் அழிந்து போக இருந்த ஏட்டு சுவடிகளுக்கு நூல்வடிவம் கொடுத்து இன்றைய சமுதாயத்தினருக்கு ஏற்ற வகையில் அச்சேற்றியவர்களாகிய இருபாலைசெட்டியார், ஏழாலை ஐ. பொன்னையாபிள்ளை, சுன்னாகம் ஆ. கணபதிப்பிள்ளை வைத்திய சதுரகராதியை எழுதிய வீரமாமுனிவர் போன்றோர் தமிழ் சித்த வைத்தியதுறையினரால் மறக்க முடியாதவர்களும் போற்றப்பட வேண்டியவர்களுமாவர்.

சென்ற காலங்களில் மிகவும் சிறப்பாக வளர்ந்து இன்று ஆங்கில வைத்தியத்திற்கு சமமாக முன்னேறி இருக்க வேண்டிய சித்த ஆயுர்வேத வைத்தியம் வைத்தியர்களின் குறுகிய மனப்பான்மையாலும் சுயநலப் போக்கினாலும் இன்றும் வளர்ச்சி குன்றியும் சில தன்மைகள் அழிந்தும் விட்டன. இப்படியான போக்கினால் அழிந்து விட்டவைக்கு உதாரணமாக:-

இன்று சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு இலங்கையில் பிரபல்யம் அடைந்து வரும் ''அக்கியூபங்சர்'' (நாயோட்டு வைத்தியம்) வைத்திய முறை அன்று எம்மக்கள் மத்தியில் சிறப்பாக வளர்ச்சியுற்றிருந்தது. இவ் வைத்திய முறையில் கிரிகைகளான சுடுதல், இரட்சைவைத்தல் போன்றவை இன்னும் கூட சில பிரபல்யமான பரம்பரை தொடர்பு கெடாமல் வைத்திய சேவை ஆற்றிவரும் குடும்பங்களுக்கிடையே இன்னும் அழியாமல் நடைமுறையில் இருப்பதைக்காணலாம். இறுதியாக தமிழ் மொழியுடன் ஒன்றி வளர்ந்த இவ்வைத்தியத்துறையில் வளர்ச்சி பன்முகப்பட்ட ஆய்வுகள் மூலமும் கொழும்பிலுள்ள ஆயுர்வேத பல்கலைக்கழகமும் நாட்டிலுள்ள ஏனைய சித்த ஆயுர்வேத வைத்திய கல்லூரிகளும் நாவின்னையில் உள்ள ஆயுர்வேத ஆராய்ச்சி நிலையமும் தனிப்பட்ட வைத்தியர்களும் பெரிதும் உழைத்தால் எமது சித்த ஆயுர்வேத வைத்தியதுறைக்கு ஓர் ஒளிமயமான எதிர்காலம் அமையும் என்பதில் ஐயமில்லை.


மெடிக்கல் சென்ரர்
மீசாலை மேற்கு,
மீசாலை.

(7637)

### சிந்தனைக்கு

வேலிகள் நன்றாக இருந்தால்தான்,
அண்டை வீட்டுக்காரர் நன்றாக இருப்பார்கள்.
-- ராபர்ட் ஃபிராஸ்ட்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 01-03-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023
தபால் பெட்டி எண் 05

## இனவெறியர்கள் மாறப்போவதில்லை

பாலத்தீனத்தில் மீண்டுமொரு இனப்படுகொலையை சியோனிஸ்டுக்கள் நிறைவேற்றியுள்ளனர். கடந்த வெள்ளிக்கிழமை தொழுகையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பாலத்தீனியர்கள் 55 பேர் ஓர் இனவெறி பிடித்த யூதனால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இப்படுகொலை புரிந்த யூதன் இஸ்ரேலிய இராணுவத்தில் முன்னர் வைத்திய பிரிவில் கடமை புரிந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. மருத்துவ பிரிவைச் சேர்ந்த ஒருவனால் இப் படுகொலைகள் புரியப்பட்டதைப் பார்க்கும்போது சியோனிஸ்டுக்கள் எந்தளவிற்கு ஒவ்வொரு யூதருக்கும் இனவெறியை ஊட்டியுள்ளார்கள் என்பதையும், ஒவ்வொரு யூதனும் எந்தளவிற்கு இனவெறி கொண்டுள்ளான் என்பதையும் எவரும் புரிந்து கொள்வது இலகு.

அப்பாவிப் பாலத்தீனியர்களைச் சுட்டுக் கொன்ற யூதன், தற்பொழுது இஸ்ரேலிய இராணுவத்தில் இல்லை என்பதற்காக இப்படுகொலைக்கும், இஸ்ரேலிய அரசிற்கும் தொடர்பில்லை என்று கூறிவிட முடியாது. ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் யூதக்குடியேற்றவாசிகளுக்கு இஸ்ரேல் அரசு வழங்கியுள்ள ஆயுதமும், பாலஸ்தீனியர்களை நிராயுதபாணிகளாக பாதுகாப்பற்றவர்களாக வைத்திருக்கும் போக்குமே இப்படுகொலைக்கு வாய்ப்பாக அமைந்தது என்பதை இஸ்ரேல் மறுத்துவிட முடியாது. அத்தோடு பத்து நிமிடங்கள் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டபோதும், மசூதிக்கு வெளியில் இருந்த இஸ்ரேலிய இராணுவம் நடவடிக்கை எதிலும் இறங்காமை இப்படுகொலையில் இஸ்ரேலிய அரசு நேரடி தொடர்பு பற்றியும் சிந்திக்க வைக்கின்றது.

இந்தவகையில் இப்படுகொலைக்கான முழுப்பொறுப்பையும் இஸ்ரேலிய அரசே ஏற்க வேண்டும். இஸ்ரேல் அரசு படுகொலைகளுக்குக் கண்டனம் தெரிவிப்பதினால் இதன் பொறுப்பில் இருந்து தப்பித்துக் கொள்ள முடியாது.

ஆனால் பாலத்தீனத்தில் நடந்த இச்சம்பவமானது சியோனிச பேரினவாத சிந்தனையுடைய ஆட்சியாளர்களுடன் உள்ள பிரச்சினைகளை எவரும் பேச்சுவார்த்தை மூலம் சமாதான ரீதியில் தீர்த்து வைக்க முடியாது என்பதற்கு சிறந்ததொரு எடுத்துக்காட்டாகும். அதாவது இனவெறி சித்தாந்தம் கொண்டவர்கள் ஒரு

# தேசிய இனங்களின் உரிமை பறித்ததே சிறிலங்காவின் சுதந்திர வரலாறு

"சுதந்திரம்;
நள்ளிரவில் கிடைத்தது.
ஆனால்,
இன்னும் விடியவில்லை!"

சுதந்திரம் பற்றி புதுக் கவிஞர் ஒருவர் எழுதியுள்ள வரிகள் இவை. ஆனால் இலங்கையில் சிறுபான்மை இன மக்களைப் பொறுத்தவரையில் நள்ளிரவிலாவது சுதந்திரம் கிடைத்ததா? என்ற கேள்வி இன்று எழுவது தவிர்க்க முடியாததாகவே உள்ளது.

சிறுபான்மை இன மக்களைப் பொறுத்தவரையில் பிரித்தானியரிடம் இருந்த ஆட்சி அதிகாரங்கள் சிங்களவர்களிடம் மாற்றப்பட்ட, ஒரு அதிகார மாற்றமாகவே இந்த சுதந்திர தினம் உள்ளது. கடந்த 46 வருட காலத்தில் சிறுபான்மை இன மக்களின் மனதில் பதிந்துவிட்ட இந்த எண்ணத்தை மாற்றுவதற்கு எந்த ஒரு சிங்களத் தலைவர்கள் கூட முன்வரவில்லை. இன்றும் கூட இதே நிலைமையே தொடர்கின்றது.

1948இல் இந்த அதிகாரக் கைமாற்றம் இடம்பெற்ற போது சிறுபான்மையினரது நியாயமான உரிமைகள் கவனத்திற் கொள்ளப்படும் என்ற உறுதிமொழி வழங்கப்பட்டது. இந்த நாட்டில் ஒரு பாரம்பரிய குடிமக்கள் என்ற முறையில் கௌரவமான ஒரு எதிர்காலம் தமக்கும் கிடைக்கும் என இந்த தமிழ்பேசும் சிறுபான்மை இன மக்கள் உண்மையாகவே எதிர்பார்த்தார்கள்.

ஆனால் நடந்ததென்ன? நடந்து கொண்டிருப்பதென்ன?

இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்த அடுத்த வருடமே மலையகத் தமிழ் மக்களின் சுதந்திரம் பறிக்கப்பட்டது. மற்றவர்களது சுதந்திரங்களைப் பறிக்கும் ஒரு சுதந்திரமாகவே தமது சுதந்திரத்தை ஆட்சியாளர்கள் பயன்படுத்திக் கொள்ளத் தலைப்பட்டார்கள்.

1948ஆம் ஆண்டில் நடைபெற்ற தேர்தலில் தமிழர்களுக்கு கிடைத்த பிரதிநிதித்துவம் சிங்களவர்கள் மத்தியில் தேவையற்ற அச்சத்தை ஏற்படுத்தியது. அல்லது ஏற்படுத்தப்பட்டது. இதன் மூலம் தமிழர்களின் பலம் குறைக்கப்பட வேண்டும் என்ற குரல் பேரினவாதச் சக்திகளால் விடுக்கப்பட்டது.

இதனை ஏற்றுக் கொண்ட 'டி. எஸ்' அரசாங்கம் மலையக மக்களின் வாக்குரிமையைப் பறித்தது. அவர்களை குடியுரிமையற்றவர்களாக்கியது. நாடு சுதந்திரமடைந்த ஒரு வருடத்தில் அவர்கள் நாடற்றவர்களானார்கள்.

ஒரு பெரும்பான்மை பௌத்த - சிங்கள அரசாங்க ஆதிக்கத்தின்கீழ் எது நடக்குமென சிறுபான்மையினர் அஞ்சினார்களோ அது நடக்கத் தொடங்கியது. இது ஏனைய சிறுபான்மை இனங்கள் மீது அடுத்து மேற்கொள்ளப்படவுள்ள அடிகளுக்கான முதலாவது அத்தியாயமாகவே இருந்தது.

இது 'வெள்ளிடைமலை' யாக அப்போதே தெரிந்த போதிலும் கூட சில 'தமிழ்த் தலைவர்கள்' அரசின் இந்த முயற்சிக்கு கேவலமானமுறையில் சோரம் போனார்கள் என்பது சரித்திரத்தில் அழிக்க முடியாதவாறு பதிந்து விட்டது.

இதன்மூலம் சுதந்திரத்திற்கு முன்னர் வாக்குரிமையுடையவர்களாக வாழ்ந்த பகுதிகளில் பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தைக் கூட மலையக மக்கள் இழந்தனர்.

மேல் நாடுகளிற்கு அகதிகளாகச் செல்லும் தமிழர்கள் 5 வருடங்களிலேயே அங்கு பிரஜா உரிமையைப் பெற்றுவிடுகின்றனர். ஆனால் 100 - 150 வருடங்களாகஎந்த மண்ணிற்கு அவர்கள் உரமானார்களோ அந்த மண்ணிலேயே அவர்களது குடியுரிமைபறிக்கப்பட்டது. இதன் பின்னர் அவர்களை நாடு கடத்துவதற்கான ஒப்பந்தங்கள் செய்யப்பட்டன.

பல வருடங்களின் பின்னர் ஐ தே. கவின் ஆட்சியில் எஞ்சியவர்களுக்கு குடியுரிமையும் வாக்குரிமையும் வழங்கப்பட்டது. இது கூட அவர்கள் மீது அரசுக்கு ஏற்பட்ட கருணையினாலல்ல- இதன் மூலம் அவர்களது வாக்குப்பலத்தை தமது தேர்தல் வெற்றிக்குப் பயன்படுத்துவதும் ஒருநோக்கமென விமர்சகர்கள் சிலர் கருதுகின்றார்கள்.

ஆனால் இவ்வளவு காலத்தின் பின்னர் கூட அவர்கள் குடியிருக்கும் 'லயன்கள்' அவர்களது உடைமையாக்கப்படவில்லை. அவர்கள் இன்றும் "மலையகம் சிங்களவர்களின் பாரம்பரிய பிரதேசம் ஆனால் தமிழர்களுக்கு அங்கு காணி உரிமை கொடுக்க கூடாது" என்ற பேரினவாதிகளின் குரலை அரசு ஆமோதிக்கிறது.

ஆனால் தமிழர்கள் தமது பாரம்பரிய பிரதேசம் என வடக்கு - கிழக்கு பகுதியைக் கூறும்போது இங்கு எந்த இனத்துக்கும் பாரம்பரிய பிரதேசம் என ஒன்று இல்லை என அரசு கூறுகிறது. அத்துடன் வடக்கு - கிழக்கு தமிழ்ப் பகுதிகளில் அரசின் ஆதரவுடன்- ராணுவப் பாதுகாப்புடன் சிங்களக் குடியேற்றங்கள் திட்டமிட்ட முறையில் மேற்கொள்ளப்படுகின்றன. இக் குடியேற்றவாசிகளுக்கு உடனடியாகவே காணிகள் சொந்தமாக்கப்பட்டு காணி உறுதிகளும் வழங்கப்படுகின்றன.

ஆனால் இந்நாட்டின் பொருளாதாரத்திற்காக தம்மையே உரமாக்கும் மலையக மக்கள் 100 வருடங்களுக்கு மேல் வசிக்கும் பகுதிகளில் உள்ள காணிகளை அவர்களது உடைமையாக்கக் கூட இன்று அரசு தயங்குகின்றது.

'சுதந்திர' இலங்கையில் இந்த துன்பியல் நாடகத்தில் அடுத்த காட்சி 1956இல் 'தனிச்சிங்களம்' என்ற காட்சியின் மூலம் வெளிப்பட்டது. தமிழைத் தாய் மொழியாகக் கொண்டுள்ள மூன்று சிறுபான்மை இனங்களையும் பாதிப்பதாக இந்தச் சட்டமூலம் அமைந்தது.

இதன் மூலம் தமிழ் பேசும் மக்கள் நடைமுறையில் கல்வி அறிவற்றவர்களாக்கப்பட்டு சம உரிமையற்றவர்கள் என்ற நிலைக்குத்தள்ளப்பட்டார்கள். சிங்கள மக்கள் தனித்துவமான அதி உன்னத நிலைக்கு உயர்த்தப்பட்டனர்.

சிங்களமும், தமிழும் உத்தியோக பூர்வ மொழிகளாக இருக்குமென டி. எஸ் சேனநாயக்க, எஸ். டபிள்யூ ஆர். டி. பண்டாரநாயக்க. ஜே. ஆர் ஜெயவர்த்தனா ஆகியோர் 25 5-1944இல் சட்டசபையில் நிறைவேற்றிய தீர்மானத்திற்கு முரணானதாக இது இருந்தது. "ஆற்றைக் கடக்கும் வரை தான் அண்ணன் தம்பி.." என்ற கூற்று இங்கு உண்மையானது.

இலங்கை அரசு சிங்களவர்களை மட்டுமே நம்பியிருக்க ஆரம்பித்துள்ளது என்பதை இந்த நடவடிக்கைகள் தெளிவுபடுத்தின. நாட்டின் ஏனைய இனத்தவர்கள் தமது அனுமதியுடனும் அனுசரணையுடனுமே வாழவேண்டிய ஜீவன்கள் என்ற அவர்களுடைய மனப்போக்கும் இதன் மூலம் வெளிப்பட்டது.

இந்த ஒடுக்குமுறைகளுக்கு எதிராக தமது உரிமைகளைக் கோரி 'அஹிம்சை' முறையிலான போராட்டத்தை தமிழர்கள் ஆரம்பித்தனர். ஆனால், இவை அனைத்தும் ஆயுதபலம் கொண்டு அடக்கப்பட்டன. அத்துடன் போராட்ட உணர்வுகளைத் திசை திருப்புவதற்காக ஒப்பந்தம் என்ற 'பொறிகள்' ஆங்காங்கே வைக்கப்பட்டன.

தமிழ் தலைமைகளும் இந்தப் பொறிகளுக்குள் அகப்பட்டன. ஆனால், சிங்களவர்களுக்காக என உருவாக்கப்பட்ட இந்த தமிழ் தலைவர்களுடனான இந்த ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்துவதில் அக்கறை காட்டவில்லை. அவற்றைக் கிழித்தெறிவதே அவர்களுக்குப் பிடித்தமானதாகவிருந்தது.

இந்நிலையில் அஹிம்சை பலனளிக்காது என்ற எண்ணத்தில் ஆரம்பமானதே. இன்றைய தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டம், இதுவே ஜனாதிபதியால் இன்று 'பயங்கரவாதம்' என அழைக்கப்படுகின்றது.

தமிழ் கூட இன்று தேசிய மொழியாக அங்கீகரிக்கப்பட்டுவிட்டதென ஆட்சியாளர்கள் கூறுகின்றார்கள். ஆனால், இது வெறும் 'காகிதத்தில் எழுத்துகளாக" மட்டுமே உள்ளன என்பது தமிழர்கள் அனைவருக்குமே தெரியும்.

ஒரு துளி இரத்தம் கூட சிந்தாமல் பெறப்பட்டதே இலங்கையின் சுதந்திரம் ஆனால், சிறுபான்மையினரின் சுதந்திரத்தையும்-தனித்துவத்தையும் அங்கீகரிப்பதற்கு ஆட்சியாளர்கள் தவறிவிட்டன. இலங்கையில் இரத்த ஆறுகள் ஓடுவதற்கு இன்று காரணமாகிவிட்டது. இதனையே கடந்த 46 வருடகால இலங்கையில் சரித்திரம் கூறுகிறது.

தமிழ் பேசும் மக்களின் நியாயமான அபிலாஷைகளை அங்கீகரித்து அவர்களுக்குக் கொடுக்க வேண்டியதை கொடுப்பதன் மூலம் மட்டுமே இந்த இரத்தகளரிக்கு நிரந்தரமாக முடிவு காண முடியும் அதுவே 'சுதந்திரம்' என்பதையும் அர்த்தப்படுத்தும்.

இன்று நாட்டின் ஒரு பகுதி 21ஆம் நூற்றாண்டை நோக்கி முன்னேறிச் செல்லும் அதே வேளையில் இன்னொரு பகுதி 12ஆம் நூற்றாண்டை நோக்கி பின் நோக்கிச் செல்லும் நிலையே காணப்படுகின்றது. கொழும்பு உட்பட தென்பகுதிகளில் அதிநவீன தொழில்நுட்பங்கள் அறிமுகமாகிக் கொண்டிருக்கும்போது வட பகுதி புராதன நிலையை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது நாட்டின்ஒரு பகுதி மீது அரசினால் விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத்தடையின் விளைவே இது.

இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்தபோது சம உரிமையின் அடிப்படையில் ஏனைய தேசிய சிறுபான்மை இனங்களுக்கு உரிய உரிமைகள் வழங்கப்படாமல், ஒரு பௌத்த -சிங்கள நாடாக இதனை ஆட்சியாளர்கள் மாற்றியமையே இந்த முரண்பாடுகள் - இரத்தக் களரிகள் அனைத்துக்கும் காரணம். இன்று கூட இதனை ஒரு மதசார்பற்ற நாடாகப் பிரகடனம் செய்து சிறுபான்மையினர்களையும் அரவணைத்துக் கொள்ள பேரினவாதிகள் தயாராக இல்லை.

இந்நிலையில் சிங்கள மக்களைக் குறிக்கும் சிங்கக்கொடி இன்று வாளேந்தியவாறு பறப்பதிலும் அர்த்தம் இருக்கத்தான் செய்கின்றது.

-அர்ஜுனா

அதாவது இனவெறி சித்தாந்தம் கொண்டவர்கள் ஒரு போதும் மற்றைய இனத்தின் உரிமைகளை மதித்துப் போற்றமாட்டார்கள் என்பதையே இது வெளிப்படுத்து கின்றது.

ஆனால், இதனைப் புரிந்து கொள்ளாதவர்களும்/ புரிந்து கொண்டு இருப்பினும் அதிகாரத்தை கைப்பற்று வதற்கான ஆசை அல்லது தமது இயலாமையை மூடி மறைத்துவிட விரும்புபவர்களுமே இச்சியோனிச | பேரின வாத சக்திகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவும், சமா தான தீர்வு என்ற போலியான நம்பிக்கைகளை மக்க ளுக்குக் கொடுக்கவும் முற்படுகின்றனர்.

இந்த வகையிலேயே பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசிர் அரபாத் இஸ்ரேலுடன் பெரும் விட் டுக் கொடுப்புடன் கூடிய சமரச பேச்சுக்களில் இறங்கி னார் என்று கொள்ள முடியும். தனியரசு கோரிய பாலஸ்தீன விடுதலை இயக்கம் இரு பகுதிகளில் சுயா ட்சி என்ற போர்வையில் சில அதிகாரங்களைப் பெற் றுக் கொள்வதுடன் திருப்திப்பட்டுக் கொண்டமை. அதன் பலவீனத்தின் வெளிப்பாடே ஆகும்.

இதல்கூட இஸ்ரேல் கூறிய மாதிரி நடந்துகொள்ள வில்லை. சுயாட்சி வழங்குவதாகக் கூறிய இரு பிரதே சங்களில் ஒன்றின் விஸ்திரணத்தை குறைக்க முயற் சித்தது. ஒப்பந்தத்தின்படி சுயாட்சிப் பகுதியில் இருந்து இராணுவத்தை வாபஸ்பெறுவதை பிற்போட் டது. இதன்பின்பும் பாலஸ்தீன விடுதலை இயக்கம் விட் டுக் கொடுத்து பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்தது.

ஆனால், ஒப்பந்தத்தால் சர்வதேச ரீதியில் தன க்கு ஏற்பட்ட அனுகூலமான வாய்ப்புக்களை மட்டும் இஸ் ரேலிய அரசு பயன்படுத்திக் கொண்டது. இறுதியில் இப் படுகொலைக்குத்துணையாகஇருந்து சமரசப்பேச்சுவார்த் தையில் ஈடுபட்ட பாலஸ்தீன விடுதலை இயக்கத்தை அரசியல் ரீதியாகப் பெரிதும் பலவீனப்படுத்தியது. அதன் அரசியல் எதிர்காலத்தை கேள்விக்குரியதாக்கியுள்ளது.

இஸ்ரேல் கடைப்பிடித்த இவ் இராஜதந்திரமானது தனியாக இஸ்ரேலுக்கு உரியதல்ல. கடந்த காலத்தில் சிங்களப் பேரினவாதத் தலைவர்களும் தமிழ்த்தலைவர் களை இவ்வாறே ஏமாற்றினார்கள். ஆனால், தமிழ்த்தலை வர்களும் பலவீனமானவர்களாக இருந்ததால் தொட ர்ந்தும் சிங்களப் பேரினவாதத்திடம் பலியாகிப் போனார் கள். இறுதியில் சிங்களத் தலைமையிடம் சரணாகதி அடையும் நிலைக்கே சென்றார்கள். பலத்துடன் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டிருந்தால் இவர்களை சிங்களத் தலைவர்களால் ஏமாற்றியிருக்க முடியாது. இவர்கள் தமிழ் மக்களை ஏமாற்றியிருக்க வேண்டிய தேவையும் ஏற்பட்டிருக்காது. அதேபோன்று பாலஸ்தீன விடுதலை இயக்க தலைமையையும் இஸ்ரேலும் ஏமாற்றி இருக்க முடியாது.

படுத்தியது. அல்லது ஏற்படு

கருதுகின்றார்கள்.

மானத்திற்கு முற்றிலும் முர

ரின் சுதந்திரத்தையும்-தனித்

-அர்ஜுனா

### அமெரிக்க - ரஷ்ய உறவில் புது நெருக்கடி

# அமெரிக்க சி. ஐ. ஏ. அமைப்பினுள் ரஷ்ய கே. ஜி. பியின் ஊடுருவல்

(வாஷிங்டன்)

உயர்தர அனுபவம் பெற்ற ஒரு சி. ஐ. ஏ. அதிகாரியும் அவரது மனைவியும் சுமார் 10ஆண்டுக்காலம் ரஷ்யா வுக்கு உளவு தெரிவித்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கி றார்கள்.

இது ஒரு பாரதூரமான சம்பவம் என வருணித்துள்ள ஜனாதிபதி கிளிண்டன் மாஸ் கோவுக்கு அமெரிக்கா தனது கடும் ஆட்சேபனையைத் தெரிவித்திருப்பதாகவும் கூறி னார்.

சி. ஐ. ஏயின் சோவியத் உளவு எதிர்ப்புப் பிரிவைச் சேர்ந்த முன்னாள் தலைவர் அல்ட்ரீச் அமைஸ் அவரது மனைவி ஆகியோரே கைது செய்யப்பட்டவர்களாவர்.

15 லட்சம் டொலருக்கு மேல் மாஸ்கோ இதற்காக கொடுத்துள்ள பணம் சம்பந் தமாக எதுவும் கூற கிளிண் டன் மறுத்துவிட்டார். ஆனால் இது மிகப்பெரும் உளவுச் சம்பவங்களில் ஒன்று என அமெரிக்க அதிகாரிகள் வர்ணித்தனர். இந்த அதிர்ச்சி அமெரிக்க, ரஷ்ய உறவு குறி த்து சில மறுபரிசீலனைகளை மேற்கொள்ளும் நிர்ப்பந்த த்தை ஏற்படுத்தும் எனத் தெரிவித்த கிளிண்டன் அமெ ரிக்க உளவுக்கு ஏற்பட்ட பாதிப்பு குறித்து உயர் மதி ப்பீடுஒன்றுக்கும் உத்தரவிட் டிருக்கிறார்.

சிரேஷ்ட சி. ஐ. ஏ. அதி காரியுடன் சம்பந்தப்பட்ட ரஷ்ய ராஜதந்திரிகளை வாபஸ் பெற்றுக் கொள்ளு மாறு அமெரிக்கா, ரஷ்யா வைக் கேட்டுள்ளது.

சமீப ஆண்டுகளில் ரஷ்ய - அமெரிக்க உறவு அபிவிருத்தி அடைந்து வரும் நிலையில் இப்பிரச்சினையை தீர்க்க சில குறிப்பிட்ட நடவடிக்கையை எடுத்துக் கொள்வது ரஷ்யா வின் பொறுப்பு என்றும் வெள்ளைமாளிகையின் சிரே ஷ்ட அதிகாரி ஒருவர் கூறி யுள்ளார்.

ரஷ்யா நடவடிக்கை எடுக் கத் தவறினால் நாங்களே நடவடிக்கை எடுக்க நேரிடும் என்றும் அவர் கூறினார்.

31 ஆண்டுகளுக்கு மேல் சி. ஐ ஏ. அதிகாரியாக இரு ந்த 52 வயதான அல்ட்ரீச் அமைஸ் அவரது மனைவியான 41 வயதுடைய மரியா டெல் ரொஸாரியோ கஸாஸ் ஆகி யோர் கடந்த திங்கட்கிழமை கைது செய்யப்பட்டனர். மரியா கொலம்பியாவில் பிற ந்து. அமெரிக்காவில் பிரஜை ஆகியவர்.

வாஷிங்டனிலுள்ள ரஷ்ய தூதரகத்தின் இரண்டாவது அதிகாரியான விளாடிமீர் சிக்விஸ்விலி அமெரிக்க வெளி நாட்டமைச்சுக்கு இரண்டா வது முறையாக அழைக்கப் பட்டு ரஷ்யா மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றி எடுத்துரைக்கப்பட் டது.

ரஷ்யா தனது உளவு நட வடிக்கையைக் கைவிடும்படி பலதடவை சென்ற ஆண்டில் அமெரிக்கா வலியுறுத்தி இருந்தது. இதை இப்போதே கைவிட வேண்டும் என ஒரு அதிகாரி கூறினார்.

ரஷ்ய அமெரிக்க உறவில் ஏற்பட்ட இப்பாதிப்பைச் சீர் படுத்த வேண்டும் என விரும் புகிறோம் எனவும் அவர் கூறி னார்.

தேசிய பாதுகாப்பு ஆலோ சகர் அந்தனிலேக் சி ஐ ஏ. டைரக்டர் ஜேம்ஸ் உல்ஸி ஆகியோருக்கு இது பற்றி ஒன்றுபட்ட பரிசீலனையை மேற்கொள்ளுமாறு உத்தர விடப்பட்டிருப்பதாக வெள் ளைமாளிகை அதிகாரி டீ.டீ. மையர்ஸ் கூறினார்.

இச்சம்பவம் பற்றி வாஷிங் டனிலும் மாஸ்கோவிலும் ரஷ்யர்களுடன் நேரடியாகப் பேசவிரும்புகிறோம். இப் போது பேச்சு நடத்தியும் வரு கிறோம். எதிர்கால உறவு இதில் சம்பந்தப்பட்டுள்ளது எனவும் அவர் கூறினார்.

1985ஆம் ஆண்டு முதல் 1991ஆம ஆண்டு வரை அமைஸ் தம்பதிகள் ரஷ்யா வுக்கு உளவு கூறியதாகவும், இதற்காக மாஸ்கோவிடமி ருந்து அவர்கள் பணம்பெற்று ஆடம்பர வாழ்க்கை நடத்தி யதாகவும் கூறப்பட்டது.

திருமதி அமைஸ் விசார ணையில் ஒத்துழைத்து வரு வதாகவும். ஆனால் தனது கணவனுக்கு எதிராக அவர் சாட்சியமளிப்பாரா என்பது தெரியவில்லை என்றும் மேலும் கூறப்பட்டது.

வெள்ளிக்கிழமை மீண்டும் விசாரிக்கப்படும் வகையில் கணவனும் மனைவியும் பிணையின்றி சிறையில் வைக் கப்படவேண்டும் என சமஷ்டி நீதிபதி ஒருவர் உத்தரவிட் டிருக்கிறார்.

சி. ஐ. ஏ. அதிகாரிக்கு எதி ரான 39பக்ககுற்றச்சாட்டை எப். பி. ஐ உளவுப் பிரிவு தயாரித்துள்ளது

சிரேஷ்ட சி. ஐ. ஏ. அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டி ருப்பதை ரஷ்ய டெலிவிஷன் 15 வரிகளில் அறிவித்தது.

சி. ஐ ஏ. அதிகாரியின் கைதை அடுத்து பிரிட்டனின் பாதுகாப்பு பாதிக்கப்பட்டுள் ளதா என்பது குறித்து நாம் அரசாங்கத்தைக் கோரப் போவதாய் ஆளும் கன்சர் வேட்டிவ் கட்சி. எம் வி. டொபி ஜெசல் கூறினார்.

## திருமதி ஜோன் மேயர் மீது தட்சர் ஆத்திரம்

(லண்டன்)

பிரிட்டனின் உத்தியோக பூர்வ ஆபரணங்களுள் ஒன்றாகக் கருதப்படும் 'நெக்லஸ்' ஒன்றை பிரிட்டிஷ் பிரதமரின் பாரியார் அணிந்திருந்ததைக் கண்ட முன் னாள் பிரதமர் திருமதி மார்கிரட் தட்சர் ஆத்திர மடைந்தார்.

திருமதி மாக்கிரட் தட்சர் பிரதம மந்திரியாக பதவி வகித்தபோது 1,50,000 அமெரிக்க டாலர் பெறுமதியான இந்த நெக்லஸ் மத்திய கிழக்கு நாடொன்றினால் இவருக்கு அன்பளிப்பு செய்யப் பட்டது குறிப்பிடத்தக்கது.

1990ஆம் ஆண்டில் அவர் தனது பதவியை இழந்த போது அவர் தன்னுடன் ஆபரணங்கள் எதனையும் எடுத்துச் செல்வதறகு பிரிட்டன் அரசு அனுமதி அளி ககவில்லை

இந்த நெக்லசை திருமதி ஜோன் மேயர் அணிந் திருந்ததை கணடே திருமதி தட்சர் ஆத்திரமுற்றார்.

பிரதம மந்திரிக்கு வழங்கப்படும் அன்பளிப்புப் பொருட்கள் நாட்டின் சொத்தாகக் கருதப்படுகின்ற இந்த ஆபரணங்களை அணிவதற்குத் தகுதியுடைய வர் யார் என்று எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்.

# தனியார் - அரச கடிதங்கள் தனித்தனியான பொதியில்

## சோதனைக்கு வசதியாம்

(யாழ்ப்பாணம்)

சோதனைக்கு வசதியாக அரசாங்க காரியங்களுக்குரிய கடிதங்களையும், தனியாருக்குரிய கடிதங்களையும் தனித்தனியாக பொதிகட்டும் செயலில் தபால் திணைக்களம் ஈடுபட்டுள்ளது.

கொழும்பு துறைமுகத்தினூடாக கப்பல்களில் வந்து சேரும் தபால்களை சோதனையிட வசதியாகவே தபால் திணைக்களம் இந் நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

கப்பல்களில் ஏற்றப்பட்டு வடபகுதிக்கு கொண்டுவரப்படும் தபால் பொதிகள் தனியாருக்குரிய கடிதங்கள் மட்டுமே பிரிக்கப்பட்டு சோதனைக் குட்படுத்தப்படுகின்றன.

அரச காரியங்களுக்குரிய கடிதங்களையும், தனியாருக்குரிய கடிதங்களையும் தனியாகப் பிரித்துக் கட்டுவது தற்போது நாளாந்த வேலையாகி விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. கொழும்பிலிருந்து எடுத்துவரப்படும் தனியார் கடிதங்கள் பிரிக்கப்பட்டும், கிழிக்கப்பட்டும் இருக்கின்றமை தெரிந்ததே. (நி)

# தபால்கள் அனைத்தும் உடன் அனுப்பப்படும்

(யாழ்ப்பாணம்)

தபால்கள் எவையும் கொழும்பில் தேக்கமடையவில்லை. சமீப காலமாக உடனுக்குடன் வடபகுதிக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன என்று தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கொழும்பில் இதுவரையும் சேர்ந்திருந்த கடிதப் பொதிகள் அனைத்தும் கோமாரி கப்பலில் ஏற்றப்பட்டு எடுத்து வரப்பட்டன. அங்கு மீதியாக தபால் பொதிகள் எவையும் இல்லை.

### அதிகாரி தகவல்

தற்போது சேரும் கடிதங்கள் அனைத்தும் உடனுக்குடன் பொதிகட்டப்படுகின்றன. அவை தாமதமில்லாமல் எடுத்துவரப்படுவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார். (தி)

---

### பிரச்சினை

நோர்வே வெளிநாட்டமைச்சு முழு ஆதரவு வழங்குவதாகவும் சிறிலங்கா அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தம்மை ஒரு தொடர்பாளராக பணியாற்ற நோர்வே அரசு பணித்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

சிறிலங்கா அரசுடன் பேச்சுவார்த்தை நடத்த விடுதலைப் புலிகளே தற்போது தமது இணக்கப்பாட்டைத் தெரிவிக்கவேண்டியவர்களாக உள்ளனர். அடுத்த ஓரிரு நாட்களில் இவர்கள் தமது உத்தியோகபூர்வ அறிவிப்பை வெளியிடலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இதில் எனது பங்கு இரு தரப்பினர்க்கும் இடையில் ஒரு தொடர்பாளராக செயற்படுவதாகவே எப்போதும் அமையும் என்றும்,

நான் பல முறை போர்ப் பகுதிகளினுள் சென்றுள்ளேன். விடுதலைப் புலிகள் தலைவர்களுடனும் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவுடனும் தற்போது அரசின் பிரதிநிதிகளுடனும் இது குறித்து நான் பேசியிருக்கின்றேன் எனவும் பிஜோர்ட் ரோப்ட் நோர்வே வானொலிக்கு அளித்த பேட்டியின் போது குறிப்பிட்டார்.

கொழும்பிலுள்ள ஒரு அரச சார்பற்ற நிறுவனத்தின் தலைமையகத்தில் தங்கியிருக்கும் இவர் தற்போது நோர்வே சென்றிருக்கின்றார் எனத் தெரிவிக்கப்படு

### பொய்க்கால் நாடகம்

யாழ். இந்துக் கல்லூரி மாணவர்களின் ஆதரவுடன் யாழ். பல்கலைக்கழக கலைப் பீட மாணவர்களின் பொய்க்கால் நாடகம் நாளை புதன்கிழமை யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் பிற்பகல் 2.30 மணிக்கும் 4.30 மணிக்குமாக இரு காட்சிகளாக காண்பிக்கப்படும்.

### மெய்வன்மை போட்டி

யாழ் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று பிற்பகல் 2.00மணிக்கு கல்லூரிமைதானத்தில்ஆரம்பமாகும்.

---

### உதவி

றது. ஆண்டு தோறும் நடைபெறும் இந்த பாரிஸ் கூட்டம் இவ்வாண்டே முதற்தடவையாக நடைபெறாமல் விடுவது குறிப்பிடத்தக்கது இதனால் சிறிலங்காவிற்கான வெளிநாட்டு நிதியுதவியில் பெரும் 'வெட்டு' விழும் என அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர். கடந்த வருடம் நடைபெற்ற உதவிவழங்கும் நாடுகளின் குழுக் கூட்டத்தில் சிறிலங்கா அரசு கோரிய நிதியுதவியிலும் அதிகமாக 83 கோடி டொலர் நிதி இந் நாடுகளினால் வழங்கப்பட்டது தெரிந்ததே.

---

### நரோமா

யாணிகளை முற்பகல் 11-30 மணிக்கு கூட்டிச் செல்வதற்கு ஏற்பாடாகியுள்ளது எனவும் அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

---

### மணலாறில்

பற்றப்பட்டன. இத் தாக்குதலின்போது விடுதலைப் புலிகள் தரப்பில் சேதம் ஏதும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மணலாறுப் பகுதியில் இவ் வாரத்தில் புலிகள் நடத்திய மூன்றாவது தாக்குதல் இதுவாகும்.

# கிழக்கு தேர்தலுக்காக மேலும் 5000 படையினர்

(கொழும்பு)

கிழக்கில் இன்று நடைபெறும் உள்ளூராட்சி தேர்தலை முன்னிட்டு அங்கு மேலதிகமாக 5000 பொலிசார் அனுப்பப்பட்டுள்ளனர். ஏற்கனவே கிழக்கில் 10 ஆயிரம் படையினர் உள்ள நிலையில் இவ்வாறு மேலதிக பொலிசார் அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதே சமயம் மேலதிகப் படையினர் 300 வாகனங்களில் கிழக்கிற்கு அனுப்பப்பட்டதாக கொழும்பில் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை கிழக்கில் படையின் நடமாட்டம் அதிகரித்துள்ளதையடுத்து தமிழர் வாழும் பகுதிகளில் மயான அமைதி நிலவுவதாகவும் மக்கள் மத்தியில் பீதி நிலவுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# கடல் தடைச் சட்ட நீக்கம்; ஜனாதிபதி அறிவிப்பில்லை

(கொழும்பு)

வடக்கில் கடல் வலய தடைச்சட்டம் நீக்கப்பட்டதாக அரசு அறிவித்த போதிலும் இது குறித்த ஜனாதிபதியின் அறிவிப்பு இன்னமும் வெளியாகவில்லை என பி.பி.ஸி. தெரிவித்தது.

தொழில் இழந்த பல மீனவர்களுக்கு நிவாரணம்வழங்க அரசு ஒதுக்கும் நிதியின் அளவு அதிகரித்து விட்டமையே இக் கடல் தடைச் சட்டத்தை நீக்குவதற்குக் காரணம் என அதிகாரி ஒருவர் கூறினார். இத் தடையால் இந்திய மீனவர்களும் பாதிக்கப்பட்டனர். இதனால் இந்தியாவின் நெருக்குதலும் அதிகரித்திருந்தது எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடல் தடைச் சட்டம் நீக்கப்பட்டது குறித்து கொழும்பில் குழப்பம் நிலவுகிறது. அவசரகால சட்டத்தின் கீழ் இத்தடை ஜனாதிபதி விஜேதுங்காவால் முன்னர் விதிக்கப்பட்டது பத்திரிகைகளில் வெளியான செய்திகளை இன்னமும் ஜனாதிபதி அலுவலகம் உறுதி செய்யவில்லை. கடற்படை அதிகாரிகளுக்கும் இம் முடிவு அறிவிக்கப்படவில்லை. இது குறித்து இன்னமும் திட்டவட்டமான முடிவு எடுக்கப்படவில்லை எனவும் பி.பி.ஸி. குறிப்பிட்டது.

எனினும் தடை நீக்கப்பட்டாலும்சரி, அமுலில்

### பி.பி.ஸி கூறுகிறது

இருப்பினும்சரி, வடபகுதி மீனவர்கள் கடற்படையோரந்து காணப்படும் ஆபத்தான கடலில் தான் தொழிலுக்குச் செல்லவேண்டும் எனவும் பி.பி.ஸி. சுட்டிக் காட்டியது.

### ரஷ்யா அழைப்பு

முன்னாள் யூகோசெலவாக்கியாவில் நடைபெறும் சண்டையை முடிவுக்கு கொண்டுவரும் வகையில் ஜெர்மனி, பிரான்ஸ், அமெரிக்கா, பிரிட்டன், ரஷ்யா, ஆகிய நாடுகள் ஒரு நாள் உச்சி மாநாட்டை நடத்த வேண்டுமென ஜனாதிபதி பொறிஸ் யெல்ட்சின் அழைப்பு விடுத்துள்ளார்.

---

### கல்வித்துறைத்

கலைப் பீடத்தின் கீழ் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

வயதெல்லையைக்காரணம் காட்டி விரிவுரையாளர் பதவிக்கு நேர்முகத் தேர்வில் தெரிவு செய்யப்பட்ட இரு விரிவுரையாளர்களின் நியமனத்தை பல்கலைக்கழகக் கவுன்சில் நிராகரித்ததை ஆட்சேபித்தே பேராசிரியர் ஆறுமுகம் தனது இராஜினாமாவைச் சமர்ப்பித்துள்ளார்.

யாழ் பல்கலைக் கழகத்துறை தலைவர் ஒருவர்தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார் என்று நேற்று செய்தி வெளியானது தெரிந்ததே.

---

## முதலாவது பிறந்ததின வாழ்த்துக்கள்



### செல்வி துர்க்கேஸ்வரி

காலஞ்சென்ற சுப்பையா ஆசிரியரின் அருமைப் பேர்த்தியும் தெல்லிப்பழையைச் சேர்ந்த கோணேஸ்வரன் இமயவள் (துளசி) தம்பதிகளின் அருமைப்புதல்வியுமான துர்க்கேஸ்வரி (துர்க்கா) தனது முதலாவது பிறந்த நாளை இன்று (1- 3- 94) தனது இல்லத்தில் (நாவலர் றோட் ஐந்து சந்தி) சிறப்பாகக் கொண்டாடுகிறார்.

---

## யாழ் மறை மாவட்ட மேய்ப்புப்பணி மகாநாடு

8- 3- 1994 -- 14- 3- 1994

---

## குருத்துவ திருநிலைப்படுத்தலும் நன்றித் திருப்பலியும்



### அருட்திரு. அல்பேட் ஜோசப் அருள்ராஜா அ.போ.ம.

கிளரீசிய வேதபோதக சபையில் அங்கத்துவம் வகிக்கும் எமது மகன்

**அருட்திரு. அல்பேட் ஜோசப் அருள்ராஜா (அ. போ. ம.)**

அவர்கள் இறைவனின் குருவாக எதிர்வரும் பங்குனித் திங்கள் இரண்டாம் நாள் புதன்கிழமை காலை 9-00 மணிக்கு யாழ் புனித மரியன்னை பேராலயத்தில்

**மகா மேன்மை தங்கிய ஆயர் தோமஸ் சவுந்திரநாயகம்**

அவர்களால் திருநிலைப்படுத்தப்படவுள்ளார்.

அவர் பங்குனி 19-ம் நாள் சனிக்கிழமை காலை 7-30 மணிக்கு அச்சுவேலி புனித சூசையப்பர் ஆலயத்தில் தமது நன்றித் திருப்பலியை நிறைவேற்றவுள்ளார்.

இறைவனின் இப் பேருபகாரத்திற்கு எம்முடன் சேர்ந்து நன்றிகூற உற்றார், உறவினர், நண்பர்கள், அன்பர்கள் அனைவரையும் மகிழ்வுடன் அழைக்கின்

மான துர்க்கேஸ்வரி(துர்க்கா)தனது முதலாவது பிறந்த நாளை இன்று (1- 3- 94) தனது இல்லத்தில் (நாவலர் றோட் ஐந்து சந்தி) சிறப்பாகக் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அம்மம்மா, மாமா, மாமி, சாமிலா மச்சாள், நித்திலா மச்சாள், அப்பப்பா, அப்பம்மா, குகன் சித்தப்பா (பிரான்ஸ்), செல்வத்தி சித்தப்பா, அத்தைமார், உற்றார், உறவினர் ஆகியோர் துர்க்கை அம்மன் அருளால் நூறாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

(7644) - குடும்பத்தினர்.

---

# தேவை

நடமாடும் மருத்துவ சேவைக்கு (Mobile Medical Service) பெண் தாதியர் (Female Nurse) உடன் தேவை. 18—30 வயதிற்குட்பட்டோர் 10-03-1994 க்கு முன்பு கிடைக்கக்கூடியதாக விண்ணப்பிக்கலாம். ஃ அண்மையில் உள்ளோர் விரும்பத்தக்கது.

நிர்வாகி

வில்லியம் ஹவே தனியார் மருத்துவமனை

இல. 17. கண்டி வீதி,

(7646) யாழ்ப்பாணம்.

---

யாழ், பல்கலைக்கழகத்தின்

யாழ். இந்துக் கல்லூரி மாணவர்களின்

ஆதரவுடன்

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட

மாணவரவை வழங்கும்

## பொய்க்கால் (நாடகம்)

(18-வது தடவையாக மேடையேறுகிறது)

இடம்: யாழ். இந்துக் கல்லூரி குமராசுவாமி மண்டபம்

காலம்: 02 - 03 - 1994 (புதன்கிழமை)

நேரம்: பிற்பகல் 2-30, 4-30 (இரு காட்சிகள்)

**பிரவேச அன்பளிப்பு: ரூபா. 10/- மட்டும்**

விளம்பர அன்பளிப்பு:

**இராசம் மோட்டோர்ஸ்**

817, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(7642)

---

...கிழருக்கும் இவர் தற்போது நோர்வே சென்றிருக்கின்றார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

### தற்காலிக

திகதி இங்கிருந்து மீண்டும் திருகோணமலை செல்வதுடன் தனது சேவையை முடித்துக்கொள்ள இருப்பதாகவும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ் வதிவிடப்பிரதிநிதி திரு செற்றிக் பிரவா தெரிவித்தார்.

ஒருமுறை மட்டும் தனது சேவையை நடத்தும் மேற்படி கப்பல் சிங்கப்பூர் நிறுவனம் ஒன்றில் இருந்து வாடகைக்கு அமர்த்தப்படுவதாகவும், இதில் ஏனைய பகுதியிலிருந்து யாழ். குடாநாட்டிற்கு வரவிருக்கும் வயோதிபர் மற்றும் தமது உறவினர்களுடன் வாழ விரும்புபவர்களுக்கான மனிதாபிமான சேவையாக நடத்தப்படுவதாகவும் இவ்வாறு சுமார் எண்பது பேர் இங்கு வர இருப்பதாகவும் இதே அடிப்படையில் இங்கிருந்து எழுபதுபேர் ஏனைய பகுதிக்குச் செல்லஇருப்பதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்தினரால் நிரந்தரமான கப்பல் சேவையொன்றை நடத்துவதற்கான ஆயத்தங்கள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இதற்காக ஜெனீவாவில் உள்ள சர்வதேச செஞ்சிலுவைச்சங்க பிரதிநிதிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் ஏப்பிரல் மாதம் இச்சேவை நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இக்கப்பல் சேவைக்கு அமர்த்தப்பட்ட பின்னரே நோயாளர்களைக் கொண்டு செல்ல முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (நி)

### சிறிலங்காவிற்கான

மேற்படி கடிதங்களுக்கான பதிலை எதிர்பார்த்திருப்பதாகவும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

8- 3- 1994 -- 14- 3- 1994

எதிர்பாருங்கள்

விளக்கக் கட்டுரைகள்

சிறப்பிதழ்- 8- 3- 1994

பொதுமக்கள் தொடர்புக் குழு

(7649) மேய்ப்புப்பணி மகாநாடு

---

இறைவனின் இப் பெருபகாரத்திற்கு எம்முடன் சேர்ந்து நன்றிகூற உற்றார், உறவினர், நண்பர்கள், அன்பர்கள் அனைவரையும் மகிழ்வுடன் அழைக்கின்றோம்.

நன்றி

திரு. ஞானப்பிரகாசம் அல்பேட்

திருமதி மேரி பிலோமினா ஞானப்பிரகாசம்

அச்சுவேலி அல்பேட் குடும்பத்தினர்

27-2-94 (7636)

---

# சோழன் நெல் அரிசி வாணிபம்

**01-03-1994 இன்று செவ்வாய்க்கிழமை**

**காலை 10·00 மணிக்கு**

**பருத்தித்துறை வீதி, நெல்லியடியில்**

**புதிதாகத் திறக்கப்படும்.**

## சோழன் நெல் அரிசி வாணிப நிலையத்தில்

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட தரமான நாட்டரிசி, தவிடு, நெல் மற்றும் உள்ளூர் விளைபொருள்களை நியாய விலையில் மொத்தமாகப் பெற்றுக்கொள்ளலாம் என்பதை சகல வியாபாரிகளுக்கும், பாவனையாளர்களுக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

# சோழன் நெல் அரிசி வாணிபம்

## பருத்தித்துறை வீதி, நெல்லியடி.

(7643)

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் [illegible] வீதி 81 ஆம் இலக்கத்திலுள்ள "[illegible]" பணிமனையில் 1994 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 01 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.